Regisered as a News Paper in Ceylon

★ ★

விலை: சதம் 15

**கல்ஸியம் காபைட்**

சொந்தப் பாவனையாளர்க்கு மட்டும்

இரு. ரூ. 1-50 சதத்திற்கு கிடைக்கும்

**கதிர்ஹாட் வெயர்ஸ்**

11/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

# ஈழநாடு

EELA NADU

தேசிய தினசரி


போன்: 7199

தந்தி வைரம்

**பொ. அம்பலவாணர்**

தங்க வைர

**நகை வியாபாரம்**

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.

மலர் 13 பங்குனி 12 முஹறம் 28 (26-3-71) வெள்ளிக்கிழமை இதழ் 44

## இரத்தக்களரியை ஏற்படுத்த அனுமதியோம்!

# மக்கள் விரும்பினுல் ஜனநாயக வழியில் ஆட்சியை மாற்றலாம்

## நிதி அமைச்சர் கூறுகிறர்

கோட்டை, வியாழன்

**நாட்டில் இரத்தக்களரியை ஏற்படுத்தி அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு பிற்போக்குவாதிகள் எடுத்துவரும் முயற்சிக்கு அரசாங்கம் இடம் கொடாது என்றும் பொதுமக்கள் விரும்பினுல் ஜனநாயக முறையில் ஆட்சியைமாற்றியமைக்கலாம் என்றும் நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா கூறியுள்ளார்.**

எட்டியாந்தோட்டையில் பெற்ருர் - ஆசிரியர்சங்கக் கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிச்சொன்ஞர்.

நிதியமைச்சர் தமதுஉரையில்போது மேலும் கூறியதாவது:-

நாட்டின் இரத்தக்களரியை ஏற்படுத்துவதற்குபிற்போக்கு சக்திகள் முயற்சி செய்கின்றனர். 1956-ம் ஆண்டு காலஞ்சென்ற எஸ் டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்கா ஆட்சிக்குவந்தார். 1959ம் ஆண்டு பிற்போக்குவாதிகளின் சதி முயற்சியினுல் அவர் கொலைசெய்யப்பட்டார். 1960ம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்தார் அவரது ஆட்சியும் 1962ம் ஆண்டு பிற்போக்குவாதிகளின் சதிமுயற்சியினுல் வீழ்ச்சியடைந்தது' அதேபோன்ற முயற்சிகளை இப்போதும் செய்து நாட்டில் இரத்தக்களரியை ஏற்படுத்தபிற்போக்குவாதிகள் முயற்சி செய்கின்றனர் பொதுமக்கள் விரும்பினுல் ஜனநாயக முறையில் எந்த ஆட்சியையும் மாற்ற உரிமை உடையவர்கள்' ஆனல் இரத்தக்களரிமூலம் ஆட்சியைக் கவிழ்க்கச் சய்யும் எந்த சதி முயற்சியையும் அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது' படித்த வாலிபர்களை இப்பிற்போக்கு வாதிகள் தவறுன வழியில் வழி நடத்திச்செல்லமுயலுகின்றனர் இந்த முயற்சிக்குவாலிபர்கள் இடங்கொடுக்கமாட்டார்களென நம்புகிறேன்

## யாழ். பொறியியல் பகுதி ஊழியர்களின் முன் மாதிரி

யாழ்ப்பாணம், வெள்ளி

சுன்னாகத்திலிருந்து மல்லாகம் கிராமசபை அலுவலகத்திற்குச்சிரமதானமூலம்கொலைபேசித் தொடர்பு வசதி செய்யப்பட்டுள்ளது. இச் சிரமதானத்தின் மூலம் அரசாங்கத்திற்கு 600 ரூபா மீதப்படுத்தப்பட்டது அரசாங்க ஊழியர்களே இச் சிரமதானத்தில் ஈடுபட்டுழைத்தனர்

யாழ் மாவட்ட தந்திப் பொறியியலாளர் திரு. சி. கந்தசாமி தலைமையில் யாழ்ப்பாணம் பொறியியல் பகுதியைச்சேர்ந்த ஊழியர்கள் கடந்தவாரம்சுன்னகத்திலிருந்து மல்லாகம் கிராமசபைக்குச் சிரமதானம் மூலம் தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தனர் மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வ, பொன்னம்பலம் சிரமதானத் தொண்டர்களின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

வடபகுதியில்இதுபோன்ற சிரமதானம் நடைபெற்றது இதுவே முதல் தடவையென்றும் தேசாபிமான சக்திகளுக்கு இது ஓர் எடுத்துக்காட்டு என்றும் திரு. பொன்னம்பலம் தமது பாராட்டுரையில் குறிப்பிட்டார்.

சொந்தக்கட்டிடங்களுக்கு

## அரசாங்ககாரியாலயங்கள் மாற்றப்படும்

கோட்டை. வியாழன்

தனியார் கட்டிடங்களில் அமைந்துள்ள அரசாங்கக் காரியாலயங்கள் விரைவில் அரசாங்கக் கட்டிடங்களுக்கு மாற்றப்படவுள்ளன.

தனியார் கட்டிடங்களில் அரசாங்க காரியாலயங்கள் அமைந்துள்ளதனுல் வாடகைப்பணமாக அரசாங்கத்துக்கு அதிக பணம் செலவாகின்றது

இத்திட்டத்தின் முதற்படியாக, கொழும்பு சுகாதார சேவைக் சந்தோர் தனியார் இடத்திலிருந்து மாற்றப்படும். கயரோக தடுப்பு நிவாரணக் கட்டடத்துக்கு இக்கந்தோர் இடமாற்றம் செய்யப்படும். அத்துடன் இக்கட்டடத்தைச் சுற்றி டாக்டர்களுக்கும், மற்றும் உத்தியோகத்தர்களுக்குமான விடுதிகள் அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## சிவபால யோகி மகராஜ்

யாழ்ப்பாணம், வெள்ளி

அடுத்த மாதம் 1-ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் சிவபாலயோகி மகராஜ் நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு அருகாமையிலுள்ள யாழ் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் மாலை7 மணியளவில பாதபூசை, வரவேற்பு தரிசனம் ஆகிய நிகழ்ச்சிகளிலும், 2-ம் 3ம்திகதிகளில் தியானம், தரிசனம் ஆகிய நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்வார்

## முஜிபுரின் கோரிக்கைக்கு யாஹ்யா இணக்கம்?

டாக்கா, மார்ச் 25

கிழக்குப் பாகிஸ்தான் அவாமிலீக் தலைவர் சேக் முஜிபுர் ரஹ்மானின் 4 அம்சக் கோரிக்கையை கொள்கையளவில் ஜனதிபதி யாஹ்யாக்கான் உடன்பட்டிருப்பதாக அவாமி லீக்கின் பொதுக்காரியதரிசி திரு. அகமத் தெரிவித்துள்ளார்.

திரு முஜிபுரின் ஆலோசகர்களும் உதவியாளர்களும் யாஹ்யாகானுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்பு வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. பொதுக்காரியதரிசியின் அறிக்கையைஇன்று டாக்கா வானெலி நிலையம் ஒலிபரப்பியது

கிழக்குப் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியை நீக்குதல், இராணுவத்தை திருப்பி அழைத்தல், ஆட்சிப் பொறுப்பை மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தல், கிழக்குப் பாகிஸ்தானில் இராணுவச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட பின் நடைபெற்ற இராணுவத் துப்பாக்கிச் சம்பவங்களை விசாரணை செய்தல் ஆகியவையே முஜிபுர்ரஹ்மானின் நாலம்சக் கோரிக்கையாகும்

## கடைசிச் செய்தி

கடைசியாகக் கிடைத்த செய்திஒன்றின்படி வருகிற சனிக்கிழமை கிழக்குபாகிஸ்தானில் பொதுவேலைநிறுத்தமொன்றை செய்யுமாறு முஜிபுர் கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நேற்றும் இன்றும்இராணுவத்திற்கும்பொதுமக்களுக்குமிடையே நடந்த கைகலப்பில் நாட்டின் பல பகுதிகளில் 110பேர் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டதை ஆட்சேபித்து இந்த வேண்டுகோளை முஜிபுர் விடுத்துள்ளார், இராணுவத்தின் இச்செயல்கள் ஜனதிபதி யாஹ்யாஹானை அதிர்ச்சி அடையச்செய்துள்ளதாகச் சொல்லப்படுகிறது,

# யாழ். மாநகரசபையில் ராஜசூரியருக்கு அனுமதி

யாழ்ப்பாணம், வெள்ளி

**யாழ்ப்பாணம் மாநகரசபைக் கூட்டங்களில் இனி திரு ஏ. ஜி. ராஜசூரியரை அனுமதிக்கும்படி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.**

பொதுநிர்வாக உள்ளூராட்சி அமைச்சர் திரு பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா திரு. ராஜசூரியரை மாநகரசபைக் கூட்டங்களில் கலந்துகொள்ள அனுமதிக்கும்படி யாழ்ப்பாண மாநகரசபைக் கமிஷனரைக் கேட்டுக்கொண்டுள்ளார். இதனைத் தொடர்ந்தே இவர் அனுமதிக்கப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது

யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளருக்கு உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அனுப்பியுள்ள உத்தரவொன்றில் திரு. ராஜசூரியர் தமது பதவி இழப்புத்தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்திருப்பது பற்றித் தாம் அறியவந்திருப்பதாகவும், இத்தீர்ப்பு வரும் வரை அவர் உறுப்பினராக இருக்கலாமென்றே கருதலாமென்றும் எனவே வரும் கூட்டங்களில் அவரை அனுமதிக்கும்படியும் தெரிவித்துள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேஷன் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

றீகல் யாழ்ப்பாணம் தினசரி 2-30, 6-30, 9-30
ராஜ்கபூர் நர்கிஸ் நடித்த
அவன்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர் - லெட்சுமி முத்துராமன் - நிர்மலா நடித்த
வீட்டுக்கு வீடு

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சிகள்
கல்கியில் 'சோ' எழுதிய 'யாரோ இவர் யாரோ' தொடர்கதை முழுநீள ஹாஸ்ய படமாக...



ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ
சோ - மனோரமா - வாசு நடித்த
ஆயிரம் பொய்

கெப்பிட்டல் (கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு)
சிவாஜி காஞ்சனா நடித்த
சிவந்த மண்

வெகு விரைவில்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா
வெலிங்டன் (யாழ்நகர்)
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா நடித்த
மூன்றெழுத்து
(கலர்ப்படம்)


## மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வருகிற புதன் கிழமை (31-3 71) நவாலியூர் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது.

இந்நிகழ்ச்சிகளை அன்று காலை 7-30 மணிமுதல் 10-00 மணிவரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அஞ்சல் செய்யவுள்ளது இம் மகாகும்பாபிஷேகத்துக்கான விசேஷ கிரியைகள் இன்று ஆரம்பமாகின்றன.

## புதிய அதிபர்கள்

மானிப்பாய், வியாழன்

மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி பத்மாசனி ஆறுமுகம், வேம்படி மகளிர் கல்லூரி அதிபராகப் பதவியேற்றுள்ளார். காங்கேசன்துறை மகாவித்தியாலய அதிபர் திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தன் மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபராக பதவியேற்றுள்ளார் மன்னார் திருக்கேதீஸ்வரம் மகாவித்தியாலய அதிபர் திரு. சிவஞானரத்தினம் காங்கேசன்துறை மகாவித்தியாலய அதிபராகப் பதவியேற்றுள்ளார்.


நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 2-30, 6-30, 9-45
முத்துராமன்-ராஜஸ்ரீ நடித்த
அனுபவி ராஜா அனுபவி

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த
அடிமைப்பெண்

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 2 30, 6-30, 9-8[illegible]
ராஜன் - சௌகார் ஜானகி நடித்த
துணைவன்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30&4-45, p m.
3S3 PASSPORT TO HELL
(Spy Film)

6-30, 10-00 மணி
ஜெய்சங்கர்-விஜயகுமாரி நடித்த
ஜீவனாம்சம்


## நியூட்டன் நியமனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதி இ. போ. ச. கட்டுப்பாட்டு அதிகாரியாக திரு. வி ஜே ஜே நியூட்டன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச்சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே திரு நியூட்டன் இச்சபையில் கடமையாற்றிவருகிறார். இங்கிலாந்து மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள பஸ் உற்பத்திநிறுவனங்கள், பஸ் போக்குவரத்து நிறுவனங்களைப் பார்வையிட்டதோடு அவை பற்றிப் பயிற்சியும் பெற்றிருக்கிறார்.

இ. போ. ச. இலங்கையை ஆறு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு கட்டுப்பாட்டதிகாரியை நியமித்துள்ளது. (தே நி)

......

நாடகக் கலாமன்றம்

## 24வது வருட உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம், வெள்ளி

சுண்டிக்குழி, யாழ் நாடகக் கலாமன்றத்தின் 24வது வருடாந்தப் பொதுக்கூட்டம் மன்றச் செயலகமுன்றலில் தற்காலிய தலைவர் கவிஞர் கே. வி ஐயாத்துரை தலைமையில் நடைபெற்றது.

திரு எஸ். பரம்திங்லே ராஜா. முதலியார் சி மூத்தத்தம்பி ஆகியோர் மன்றக் காப்பாளர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார் மற்றும் உத்தியோகஸ்தர் தெரிவில் திரு சி கனகையா தலைவராகவும், திரு சாம் ரி சொலமன்ஸ் உபதலைவராகவும், திரு வீ சி குஞ்சிதபாதம், கவிஞர் கே வி ஐயாத்துரை ஆகியோர் இணைச்செயலாளர்களாகவும், நாடகக் கலாமணி வீ சி பரமானந்தம் பொருளாளராகவும், திரு வீ கைலாசம் கணக்குப் பரிசோதகராகவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டவர்.

திருவாளர்கள் என் ரி குணரத்தினம் என் கே நடராஜன், ரி பரமசிவம், ரி சூடாமணி, எம் திருநாவுக்கரசு ரி பூபாலசிங்கம், ரி பிலிப் ஆகியவர்கள் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (தே நி)

......

## மனையியல் கல்வி அதிகாரி

மானிப்பாய். வியாழன்

மானிப்பாயைச் சேர்ந்த திருமதி. நாகேஸ்வரி பாலேந்திரன் வடமாநில மனையியல் கல்வி அதிகாரியாக அண்மையில் பதவியேற்றுள்ளார்.


## வரி விளம்பரம்

### தேவை

2 தொன் செயின் புளக் (Chain Block) விலைக்குத் தேவை. தொடர்புகொள்ளவும். சென் பீற்றஸ் ஐஸ் பக்ரறி முல்லைத்தீவு. 2471

### விற்பனைக்கு

75 C. C லம்பிரட்டா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளுங்கள். விளம்பர இல: C/o 2726, ஈழநாடு யாழ்ப்பாணம். 2726

ஒரு வீட்டுக் கோப்பிய மரங்கள் விற்பனைக்குண்டு. சண்முகம், 16ம் கட்டைடி, களபூமி, காரைநகர். 2727


## பிரியாவிடையும் பாராட்டும்

யாழ்ப்பாணம், வெள்ளி

'ஒற்றுமைக்கு உலகத்திலே பெருந்தட்டுப்பாடு நிலவுகையில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலய ஆசிரியரிடையே அது மலிவாக இருப்பது குறித்துப் பெருமைப்படாதிருக்க முடியாது'' நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைவிவசாய விரிவுரையாளர் திரு. க. குககுமாரராசா வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் தமக்கு அளிக்கப்பெற்ற பாராட்டுக் கூட்டத்தில் பேசுகையிற் குறிப்பிட்டார் ஆசிரியர் குககுமாரராசா பதவியுயர்வு பெற்றமை குறித்தும் ஆசிரியர்கள் திரு' வேல்நாயகம் திரு. திருநாவுக்கரசு ஆகியோர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குப் பயிலச்சென்றமை குறித்தும் வசாவிளான் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் குழுவினர் இவ்வாசிரியர்களுக்குப் பிரியாவிடையும் பாராட்டும் அளிக்கப்பட்டது.

ஆசிரியர் குழுத்தலைவர் திரு சி சிவஞானம் கல்லூரி அதிபர் திரு எஸ் ஆறுமுகம் உப அதிபர் திரு வி. கந்தவனம் ஆகியோர் ஆசிரியர்கள் கல்லூரிக்கு ஆற்றிய சேவை குறித்துப் பாராட்டிப்பேசினர்.

......

## "விஞ்ஞான உபகரணங்களை தந்துதவவும்"

தாவடி. வியாழன்

''விஞ்ஞான ஆய்வுகூடம் அமைத்து 10 வருடங்களாகியும். விஞ்ஞானஉபகரணங்களோ அன்றி விஞ்ஞான ஆசிரியர்களோ நியமிக்கப்படாததுமிகவும்வேதனையை அளிப்பதாகவும் உடனடியாக இக்குறையை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்குமாறும் வடமாநிலக் கல்வியதிபதியையும் கல்வி அமைச்சரையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

திரு, எஸ். கந்தசாமி தலைமையில் நடந்தகூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.


......

## பலிஇல்லை

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் பத்திரகாளி கோவிலில் பொங்கல் பூஜை. மட்டும் நடைபெற்றது. கோவில் நேர்த்திக்கடனுக்கான கோழிகள் கோவில் பூசகரிடம் ஒப்படைக்கப்பட்டனவேதவிர உயிர் பலி நடைபெறவில்லை. முன்னர் வருடா வருடம் நடைபெற்றுவரும் உயிர்ப்பலிகள் நிறுத்தப்பட்ட பின்னர் மிகவும் அமைதியாக எவ்வித சச்சரவும் இல்லாமல் கோவில் நிகழ்ச்சிகள் நடைபெற்றுமுடிவடைந்தன.


ஒரு கல்லில் செதுக்கியுள்ள வாக்கியங்கள் ஒரு சிறுவனின் வாழ்க்கையில் கண் கூடாகப் பலிக்கும் கதை
வின்ஸர் வெண்திரையில்
26-3-71 இன்று முதல் ஆரம்பம்
தினசரி 4 காட்சிகள்



மாஸ்ரர்பிரபாகர், பேபி சுமதி, லட்சுமி, மனோரமா, வி. எஸ். ராகவன், சுருளிராஜன், சீர்காழி கோவிந்தராஜன் நடிக்கும்
வா ராஜா வா
(ஈஸ்ட்மன் கலர்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# லாவோஸிலிருந்து தெ. வியட்னும் படைகள்

# முழுவதும் வாபஸ்

## நோக்கம் நிறைவேறிவிட்டது என்கிருர் யு. எஸ். மந்திரி

சைகோன், மார்ச் 25

லாவோஸுக்குள் புகுந்து கம்யூனிஸ்ட் படைகள் மீது தாக்குதல் நடத்தி வந்த தென்வியட்னும் படைகள் முற்ருக அங்கிருந்து வெளியேறிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்வியட்னும் படைகளின் நோக்கம் நிறைவேறிவிட்டதாகவும் அதனுலேயே அவர்கள் லாவோஸ் பிரதேசத்திலிருந்து விலகிக்கொண்டுள்ளதாகவும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. லேயார்ட் அறிவித்திருக்கிருர்.

கம்யூனிஸ்ட்களுக்கு பொருட்களும் ராணுவத் தளபாடங்களும் கிடைத்து வந்த 'சப்ளை' வழிகளை அடைத்துவிடும் நோக்கத்துடனேயே தென்வியட்னும் படைகள் அமெரிக்க படைகளின் ஆதரவுடன் லாவோஸுக்குள் பிரவேசித்தன, இந்தத் தாக்குதல்களின் பொழுது தென்வியட்னுமியருக்கு வடவியட்னுமியரால் பலத்த சேதங்கள் விளைவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

வடவியட்னுமியரின் எதிர்த் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமலே தென்வியட்னுமியர் பின் வாங்கியதாக ஹனோய் வட்டாரங்கள் கூறின.

தென்வியட்னுமியர் திரும்புகையில் பலத்த சேதங்களுக்குள்ளாகியிருக்கிருர்கள். என்ருலும் ஆயிரம் பேர் கொண்ட ஓர் அணியை அவர்கள் எல்லைக்கருகில் உள்ள குன்றின்மீது இருத்திவிட்டு வந்திருக்கிருர்கள். இப் பகுதியில் மீண்டும் கம்யூனிஸ்டுகள் புகுந்துவிடாமல் பார்த்துக்கொள்வதற்காக இவர்கள் இங்கு நிறுத்தப்பட்டிருக்கிருர்களாம்.

லாவோசுக்குள் புகுந்த தென்வியட்னும் படைகள் யாவும் திரும்பிவிட்டதாக வாஷிங்டன் செய்திகள் கூறின.

## சியாராலியோன் புரட்சி தோல்வி?

பிறிடவுண், மார்ச் 25

சியராலியோனில் ராணுவம் நடத்திய புரட்சியை முறியடித்து விட்டதாகவும், ஆட்சி அதிகாரங்கள் யாவற்றையும் தாமே கைப்பற்றியுள்ளதாகவும் அந்த நாட்டின் அதிபர் அறிவித்திருக்கிருர்.

சியராலியோன் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டதாக முன்னர் ராணுவத் தளபதி ஜோன் பங்காரா அறிவித்திருந்தார்.

......

## ஆஸ்பத்திரி கமிட்டிக்கூட்ட தீர்மானங்கள்

யாழ்ப்பாணம். வெள்ளி

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண ஆஸ்பத்திரியின் கமிட்டிக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு டாக்டர் பிலிப் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் திரு. எஸ். இராசையாவினுல் சில பிரேரணைகள் கொண்டுவரப்பட்டன. அவையாவும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன தீர்மானங்கள் விபரம் வருமாறு:-

யாழ். ஆஸ்பத்திரியிலுள்ள தோல் தொற்று நோயாளர்களுக்குப் புறம்பான இடம் ஒதுக்கப்பட்டு வைத்தியம் செய்யப்படவேண்டும்,

குளிர் காரணமாக பாதிக்கப்படும் நோயாளிகளுக்குத் தகுந்த பாதுகாப்பளிக்கப்படவேண்டும்

நோயாளிகளுக்கு உடனடியாக சிகிச்சை அளிப்பதற்காக டாக்டர்களின் பற்ருக்குறையை நிவர்த்திசெய்தல் அத்துடன் நோயாளிகளுக்கு கட்டில் வசதிகள் அளித்தல்

யாழ். ஆஸ்பத்திரியில் மருந்து எடுப்பவர்கள் வரிசை முறைப்படி நின்று எடுப்பதற்கு நிர்வாகக் குழு தொண்டர்படை ஒன்றை நியமிக்கவேண்டும்

மருந்துத் தட்டுப்பாட்டையும் மற்றும் ஆஸ்பத்திரியிலுள்ள குறைகளை எடுத்துக்கூறி, நிவர்த்தி செய்வதற்கு நியமன எம் பி. திரு. எம். சி. சுப்பிரமணியத்தையும் யாழ்ப்பாண ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சி. எக்ஸ். மார்ட்டினையும் உதவி அளிக்கும்படி கோருதல் என இச்சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

......

## அம்புலன்ஸ் இல்லை

முல்லைத்தீவு, வியாழன்

முல்லைத்தீவு அரசினர் ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் வண்டி பழுதடைந்து எட்டு மாதங்களாகியும் இதுவரை திருத்தப்படவோ அன்றிப் பதிலாக வேறு அம்புலன்ஸ் வண்டி ஒன்ருே அனுப்ப எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம். இதனுல் அவசரமான நோயாளிகளை பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பிவைப்பதில் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாகப் புகார்கள் கூறுகின்றன.

தமிழ்நாடு அரசு

## திட்டக்கமிஷன் நிறுவும்

சென்னை, மார்ச் 25

திட்டக் கமிஷன் ஒன்றையும் நிர்வாக சீர்திருத்தக் கமிஷன் ஒன்றையும் நிறுவுவதற்கு தமிழ்நாடு அரசு முடிவு செய்திருக்கின்றது.

இந்த ஆண்டிலிருந்து 1981ம் ஆண்டு முடிவடையவுள்ள நீண்டகாலத் திட்டங்களையும் குறுகிய காலத் திட்டங்களையும் இந்தக் கமிஷன் உருவாக்கும்.

சட்டப்பேரவை மேல் சபை ஆகிய இருசபைகளின் அங்கத்தவர்களையும் கொண்ட கூட்டத்தில் தமிழ்நாடு கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங் நேற்று இத் தகவலை அறிவித்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் புதிய அரசு மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் பற்றி சர்தார் உஜ்ஜல்சிங் கூட்டத்தில் விளக்கினுர்.

புதிய திட்டக் கமிஷனில் பொருளாதார தொழில் நுட்ப அறிஞர்களும் நிபுணர்களும் அங்கம் வகிப்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

அடுத்த ஆண்டுக்குள் தமிழ் நாட்டில் உணவு தானிய உற்பத்தி 60 லட்சம் தொன்னுக உயருமென்றும் விவசாயத்தில் புதிய திட்டங்கள் பரிசீலிக்கப்படும் என்றும் வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

## பிள்ளைகள் அறிவைப்பெருக்க 'மிதக்கும் பாடசாலைகள்'

லண்டன், மார்ச் 25

எதையும் அறியும் ஆவல் உந்தித்தள்ள எதற்கும் கேள்விகேட்டுபெரியவர்களை திணற அடிக்கும் துடிப்புப் பொதுவாக நாலையசந்ததியினரான பிஞ்சு உள்ளங்களில்தான் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. உலகத்தின் விநோதங்களையும் இயற்கை அன்னையின் இரகசியங்களையும் அறியத்துடிக்கும் ஆசை இவ்விளம் இதயங்களில்தான் பொங்கி எழுகிறது.

இன்றைய விண்வெளி யுகத்தில் சிறுவர்களின் கல்விப் போதனையில் எத்தனையோ புரட்சிகரமான மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. வகுப்பறைகளில் படிப்பிப்பது கூடாது. பாடங்கள் விளையாட்டாக ஒரு பொழுதுபோக்காக சிறுவர்களுக்குப் புகட்டப்படவேண்டும் என்பது ஒரு சாராரின் கருத்து. சிறுவர்கள் தாமாகவே ஆராய்ச்சி நடத்தி தாமாகவே கண்டுபிடித்து தாமாகவே விஞ்ஞானப் பிரச்னைகளுக்கு விடைகாண வேண்டும் என்பது இன்ஞெரு சாராரின் வாதம்.

புத்தகங்களை மட்டும்படித்தால் அறிவை வளர்க்க முடியாது. எவற்றையும் நேரே சென்று பார்த்தறிவது மிக அவசியம் என்று பல பிரபல கல்வியாளர்கள் கண்டறிந்திருக்கிருர்கள். உதாரணமாக புவியியலில் ஒரு நாட்டை அவர்களின்வாழ்க்கையைப்பற்றி வாசித்தறிகிருேம். அவ்விடயம் சில நாட்கள் எம்மனதில் நினைவாக இருக்கும் பின் நினைவு அழிந்து விடுகிறது ஓர் நாட்டை நேரில் சென்று பார்க்கிருேம் மக்களுடன் நேரிற் சென்று சம்பாஷித்து அவர்களின் வாழ்க்கையைப் பற்றிப் பார்த்தறிகிருேம். இதை நாம் என்றென்றும் மறக்கவே மாட்டோம். இதனை உளவியல் அறிஞர்கள் ஆராய்ச்சி நடாத்தி அறிந்திருக்கின்றனர்.

இவ்வுண்மையை நன்குணர்ந்த பிரிட்டிஷ் கல்விமான்கள் இடங்களை மாணவர்கள் நேரடியாகப் பார்த்தறிவதற்கு கப்பல்களைப் பாடசாலைகளாக உபயோகிக்கின்றனர். பிரிட்டிஷ்தீவுகளை மட்டுமல்லாது ஐரோப்பா, வட ஆபிரிக்கா கிழக்காபிரிக்கா ஆகிய நாடுகளுக்கும் மாணவர்கள் புவியியலிலும் சரித்திரத்திலும் தாம் படித்தவற்றை நேரில் கண்டறிய இம் மிதக்கும் பாடசாலைகள் பயன்படுகின்றன.

இன்று இக்கப்பற் கல்விமுறை, கல்வியில் ஒருபகுதியாகக் கற்கப்படுகிறது. இம்முறை இன்று பிரிட்டனில் மட்டுமல்லாது பல நாடுகளிலும் பரவிவருவது குறிப்பிடத்தக்கது, கப்பலில் செல்லும்போது மாணவர்களுக்குப் பாடங்கள்போதிக்கப்படுகின்றது. விஜயம் செய்யப்போகும் நாடுகள் பற்றிய புவியியல் சரித்திர மொழி சம்பந்தமான சகல தகவல்களும் அவர்களுக்குக் கொடுக்கப் படுகின்றன,

(6-ம் பக்கம் பார்க்க)

எதிர்ப்பவர்களை

## தலைகீழாகத் தொங்கவைப்பர்

### பூட்டோ கட்சி கொள்கை

லாகூர், மார்ச் 25

மேற்குப்பாகிஸ்தான் மக்கள்கட்சி தனக்கென ஒட்டகப்படையொன்றையும், கடற்படையொன்றையும் ராணுவம் ஒன்றையும் வைத்திருக்கும் இந்தப்படைக்கு மக்களின் காவல்படை என பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

சோஷலிஸத்தை அமுல் நடத்துவதற்கு இந்தப்படை பயன்படுத்தப்படுமாம்.

இக்கட்சிக் கூட்டமொன்றில் பேசியமுன்னுள் பாகிஸ்தான் ராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் அக்பர் கான் மக்களின் எதிரிகளை இந்தப்படையினர் தெருக்களில் இழுத்துச் செல்வார்கள் சோஷலிஸத்தைநோக்கிய மக்கள் கட்சியின் நடவடிக்கைகளுக்கு எதிராக இருப்பவர்கள் மரக்கிளைகளில் தலைகீழாகத்தொங்கப் போடப்படுவார்கள் என்று கூறினுர்.

முன்னுள் வெளிநாட்டமைச்சர் திரு. அலிபுட்டோ இக்கட்சிக்கு தலைவர்என்பது குறிப்பிடத்தக்கது.

......

## இலவச படிவங்கள்

பருத்தித்துறை. வியாழன்

விஸ்வமடு படித்த வாலிபர் உப-உணவுப் பயிர்ச் செய்கைக்கான காணி விநியோகத் திட்டத்தில் காணி பெறுவதற்கு உதவியாகக் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி தமது காரியாலயத்தில் இலவசப் படிவங்களை விநியோகித்து வருகிருர். இதுவரை 4,000 வாலிபர்கள் இக்காரியாலயத்திலிருந்து படிவங்கள் பெற்றிருப்பதாகத் தெரிகிறது.

## புதிய சாம்ராஜ்ய சேமநிதி நிறுவப்படும்

லண்டன், மார்ச் 25

தொழில்நுட்பக் கூட்டுறவுக்காக ஒரு சாம்ராஜ்ய சேமநிதி ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஸ்தாபிக்கப்படவுள்ளது. சாம்ராஜ்ய ஸ்தாபனத்தின் தலைமைக் காரியதரிசி திரு.ஆன்னல்ட் சிமித் லண்டனில் இத்தகவலை வெளியிட்டார்.

இந்தப் புதிய நிதிக்கு சாம்ராஜ்ய கூட்டணியிலுள்ள முன்னேறிய நாடுகளும் பின் தங்கிய நாடுகளும் பணம் கொடுத்து உதவ முன்வந்துள்ளன. இதன் பயனுய் தொழில் நுட்ப கூட்டுறவுக்கான சாம்ராஜ்யத் திட்டம் சகல அங்கத்தவர்களையும் உட்கொண்ட ஓர் அமைப்பாக விளங்கும்.

இப்புதிய நிதித் திட்டத்தின்படி அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைச் சேர்ந்த தொழில் நிபுணர்களின் சேவையைப் பயன்படுத்த முடிவதுடன் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களில் வருமானம் குறைந்த நாடுகளைச் சேர்ந்தோர் பயிற்சி வசதிகளைப் பெறவும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

## பிரிவுபசாரம்

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விகிதராக கடமையாற்றிய திரு. மு. விசாகப்பெருமாள் ஓய்வுபெற்றதை முன்னிட்டு கல்லூரி அதிபர் திரு எஸ் சிவசுப்பிரமணியம் தலைமையில் ஒரு பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ணிவாக்கு

சாதாரண வாழ்க்கையின் மீது ஏற்பட்ட அமைதியற்ற அதிருப்தி மட்டும் இந்த யோகத்திற்கு போதிய ஆயத்தமாகாது. உள்ளத்தில் ஒரு திட்டமான அமைப்பு பெரும் மனத்திண்மை, தளரா உறுதி இவை ஆன்மீக வாழ்வில் வெற்றிபெறத் தேவை. — ஸ்ரீ அரவிந்தர்.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் பங்குனி மாதம் 12ந் திகதி (26-3-71)

## இலங்கை டாக்டர்கள்

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் டாக்டர்களாகப் பயிற்சி பெற்று வெளியேறும் இலங்கையர்கள் அனைவரையும் சுகாதார இலாகா சேவைக்குச் சேர்த்துக்கொள்ளுமென்றும் வெளிநாடுகளிலுள்ள டாக்டர்கள் அனைவரையும் சுகாதார இலாகாவின் சேவை செய்வதற்குத் திருப்பி அழைக்கப்படவிருப்பதாகவும் உதவி சுகாதார அமைச்சர் திருமதி சிவா ஒபயசேகரா தெரிவித்திருக்கிறார் சுகாதார அமைச்சின் இந்த நடவடிக்கையை நாட்டு மக்கள் மிக மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்பது நிச்சயம்.

நமது நாட்டு டாக்டர்கள் பிறநாட்டு டாக்டர்களின் திறமைக்குச் சற்றும் குறைந்தவர்களல்ல. ஊக்கமும் உதவியும் சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டால் நமது டாக்டர்கள் அரும்பெரும் சாதனைகளைக்கூட நிறைவேற்றுவார்கள்.

படிப்பும் பயிற்சியும் முடிந்து டாக்டர்களாக வெளியேறியபலருக்கு இங்கு அரசாங்க வேலையளித்து அவர்களது சேவையைத் தக்கபடி பயன்படுத்தத் தவறியதால் பிறநாடுகள் பல அவர்களது சேவையைப்பெறும் அதிர்ஷ்டத்தைப் பெற்றுள்ளன

இந்த நிலையை மாற்றி நமது டாக்டர்களின் ஆற்றலையும் அறிவையும் நமது நாடு பயன்படுத்திக் கொள்ளவும் அவர்களது சேவை நமது நாட்டுக்குக் கிடைக்கவும் ஆவனசெய்வதற்கு முன்வந்த அரசாங்கத்தைப் பாராட்டவேண்டும்.

அரசினர் வைத்தியசாலைகள் பலவற்றில் டாக்டர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது நிதி நெருக்கடி காரணமாக சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம்தானென்றாலும் உயிரைக் காப்பாற்றும் சேவையில் சிக்கனம் பார்ப்பது ஆபத்தானது. இந்த ஆபத்தான வேலையில் இறங்கியதன் விளைவை முன்னைய ஆட்சியாளர்கள் சென்ற பொதுத்தேர்தலில் அனுபவித்தனர்.

டாக்டர்களிருந்தும் கிராமப்புறப் பகுதிகளிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளில் பொறுப்பதிகாரிகளாக டாக்டர்கள் நியமிக்கப்படுவதில்லை இதனால் கிராமப்புறங்களிலுள்ள மக்கள் பட்டின, நகரப்புறங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கே சிகிச்சைபெற வருகின்றனர்.

கிராமப்புறங்களிலுள்ள ஆஸ்பத்திரிகள், வைத்தியசாலைகள் ஆகியவைகளுக்கு டாக்டர்கள் நியமிக்கப்பட்டால் நகரங்களிலும், பட்டினங்களிலுமுள்ள ஆஸ்பத்திரிகளில் ஜனநெருக்கடி வெகுவாகக் குறைவதுடன் மற்றும் பல பிரச்னைகளும் நீங்குவதற்கு வழிபிறக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

## 'இவர்களைத் தென்பகுதிக்கு மாற்றினால் பஸ் சேவை சீராகும்'

தாவடி, வியாழன்

"இ. போ. ச. வில் நாச வேலை செய்யும் வடபகுதியிலுள்ள பஸ் சாரதிகளையும் கண்டக்டர்களையும் தென்பகுதிக்கு மாற்றினால் பஸ் சேவையை சீராக்கமுடியும்.

மேற்கண்டவாறு போக்குவரத்து அமைச்சர் கௌரவ லெஸ்லி குணவர்த்தன, இ. போ. ச. முகாமையாளர் திரு. அனில் முனசிங்கா, வடமாநில இ. போ. ச அதிகாரி திரு. நியூற்றன் ஆகியோருக்கு சங்கானை பஸ் பிரயாணிகள் சங்கச் செயலாளர் திரு எஸ் எஸ். குலநாயகம் அனுப்பியுள்ள மகஜரொன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

வடபகுதியின் பஸ்சேவை சீர்கேடுபற்றி அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கடந்த 6 மாத காலமாக சங்கானை யாழ்ப்பாணம், மானிப்பாய்வழியாகச் செல்லும் குறுகிய பஸ்சேவை நிறுத்தப்பட்டிருப்பதாகவும் இதனால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பஸ்பிரயாணிகள் சங்கம் இ. போ. ச. மேலிடத்திற்கு அறிவித்திருந்தது.

தொழிலாளர்களும் அரசாங்க உத்தியோகத்தர்களும் பிரயாணம் செய்யும் வசதிக்காக காலை 8 மணிக்கு மட்டும் ஒருபஸ் சங்கானையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு சேவையில் ஈடுபடுத்துமாறு பிரயாணிகள் சங்கம் கோரியதற்கிணங்க ஒழுங்கு செய்திருந்தார்கள் ஆனால் அதுவும் நாளடைவில் ரத்துச் செய்யப்பட்டுவிட்டது.

3-3-71-ந்திகதி வடமாநில இ போ. ச. அதிகாரி திரு. நியூற்றன் அவர்களுக்கு மேற்படி சம்பந்தமாக ஒரு கடிதம் எழுதி இ. போ. ச. உயர் அதிகாரிகளையும் பேட்டிகண்டதன் பிரகாரம், காலையில் சித்தன்கேணியில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பாடசாலை பஸ்ஸில் தற்காலிகமாக பொதுமக்களையும் பிரயாணம் செய்ய உத்தரவிட்டுள்ளதாகவும் 17-3-71-ல் அவர் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இம்மாதம் 22-ம் திகதி சங்கானையிலுள்ளபஸ் தரிப்பு நிலையமென்றில், பஸ் பிரயாணிகள் சங்கச் செயலாளர், பல அரசாங்க உத்தியோகத்தர்கள், உட்படப் பலர் இரட்டைத்தட்டு பஸ் ஒன்றின்மேல் தட்டிலே ஏறியிருந்த பொழுது 'இது பள்ளிக்கூட பஸ். நீங்கள் இதில் செல்லமுடியாது இறங்குங்கள், என்று இரு கண்டக்டர்களும் கூறியதுடன் பஸ்வண்டியைத் திருப்பி சங்கானைப்பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர்.

அங்கு பிரயாணிகள் சங்கச் செயலாளர் இ போ. . முகாமையாளரால் எழுதப்பட்ட கடிதத்தைப் பொலிஸ் இன்ஸ்பெக்டருக்குக் காட்டியபோது. ஏற்றிச் செல்லும்படி அவர் கண்டக்டருக்குக் கூறினர்.

ஆனால், அவருடைய சொல்லையும் கேளாமல் பஸ் காரியாலயத்திற்கு தொலைபேசி மூலம் கதைத்த போது பிரயாணிகளை ஏற்றி வருமாறு பஸ்காரியாலயம் அறிவித்தது அதன் பின்னரே எல்லாப்பிரயாணிகளையும் ஏற்றினர்.

பஸ்வண்டி புறப்பட்டு யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது பஸ் பழுதடைந்துவிட்டதாகக் கூறி மானிப்பாயில் நிறுத்தப்பட்டுவிட்டது அப்போது வேறு பஸ் ஒன்றும் அவ்வீதியால் வரவில்லை

"அதன்பின்னர் தாவடிக் கூடாக யாழ்ப்பாணம் செல்லும் பஸ் வந்ததும் மாற்றி ஏற்றிவிட்டனர் முன்னைய பஸ் சாரதிகளும், கண்டக்டர்களும் "குசுகுசு" வென இரகசியமும் கதைத்தனராம், காலை 8-50க்கு புறப்படவேண்டிய வண்டியை 9 மணிவரை தாமதிக்கவும் செய்தனர். அதே நேரத்தில் காரைநகர் - கிளிநொச்சி பஸ் வரவே இந்த பஸ்ஸை எடுத்தனர் அப்போதும், 1 பிரயாணியை விட்டு விட்டே பஸ் சென்றது இப்படியாக நடந்து கொள்ளும் சாரதிகளினதும், கண்டக்டர்களினதும் வன்செயல் பற்றி ஆராய்ந்து ... மேலும் அம்மகஜரில் கோரப்பட்டுள்ளது.

# பருத்தித்துறை தேர்தல் ஆட்சே...

# வழக்கு விசாரணை விபரம்

"நான்தான் கொலை செய்யப்பட்ட அர்ச்சுனராசாவின் மகள் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட 12 வயதுச் சிறுமி மனோரமா 'என் தகப்பனர் என் தகப்பனர்' என்று தொடர்ந்து பேசமுடியாது திணறிய போது பாடமில்லாவிட்டால் பார்த்து வாசியும் என்று திரு துரைரத்தினம் கூறியதாக பருத்தித்துறை தேர்தல் ஆட்சேபனை வழக்கின் 5-ம் நாள் விசாரணையின் போது சாட்சியமளித்தமனுதாரரான திரு ஆசைத்தம்பி திருநாவுக்கரசு கூறினர்.

பருத்தித்துறை தேர்தல் ஆட்சேபனை வழக்கு 5-ம் நாளாக மீண்டும் நீதியரசர் திரு எஸ் ஆர் விஜயதிலகா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது தமிழ்க் காங்கிரஸ் கட்சி வேட்பாளராக 1970 தேர்தலில் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியுற்ற திரு என் நடராசாவின் சாட்சியம் தொடர்ந்து பதியப்பெற்றது.

முதலாவது எதிர் மனுதாரரான பருத்தித்துறை எம். பி. திரு துரைரத்தினத்தின் வழக்கறிஞர் திரு என், சத்தியேந்திரா இரண்டாவது நாளாகத் தொடர்ந்து திரு நடராசாவைக் குறுக்குவிசாரணை செய்தார்.

திரு நடராசாவின் சாட்சியம் முடிந்தபின்னர் மனுதாரரான திரு ஆசைத்தம்பி திருநாவுக்கரசுவின் சாட்சியம் தொடங்கியது இன்று வழக்கு விசாரணை மார்ச் மாதம் 26ம் திகதி காலை 10 மணிவரை ஒத்தி வைக்கப் பட்டபோது திரு என் சத்தியேந்திரா திரு திருநாவுக்கரசைக் குறுக்கு விசாரணை செய்து கொண்டிருந்தார். 26ம் திகதி தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படும்

திரு என். நடராசா வழக்கறிஞர் திரு சத்தியேந்திராவின் குறுக்குக் கேள்விகளுக்குப் பதிலளித்துக் கூறியதாவது:

1960 மார்ச் மாதம்தான் நான் முதன்முதலில் ஆட்சி மன்ற அரசியலுக்கு வந்தேன் 1960லும் அதன் பின்னரும் நான் ஆட்சிமன்றத்தேர்தலில் போட்டியிட்டபோது வெற்றியடைவேன் என்றுதான் நினைத்தேன்.

1970ல் நகரசபைத் தலைவர் பதவியை நான் இழந்த போதும் அந்தத்தலைமைப் பதவி கொல்லர் இனத்தைச் சேர்ந்த ஒருவருக்குக் கிடைத்தபோதும் நான் கோபப் படவில்லை:

'கடந்த பொதுத் தேர்தலின்போது கொல்லர் இனத்தைச் சேர்ந்த ஒருவர் என்னைப் பதவியிலிருந்து இறக்கிவிட்டதாக நான் பிரச்சாரம் செய்யவில்லை. மாறாக கொல்லர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்னையே ஆதரித்து வேலை செய்தனர்.

திரு நடராசாவின் வழக்கறிஞரான திரு எச் எல். டி சில்வா மறுவிசாரணைசெய்த போது கூறியதாவது;

எனது தலைமையிலான உள்ளூராட்சிமன்ற நிர்வாகம் ஊழல் நிறைந்ததென நான் போட்டியிட்ட ஒவ்வொரு தேர்தலிலும் தீவிர பிரச்சாரம் மேற்கொள்ளப் பட்டபோதிலும்நானேமீண்டும் மீண்டும் தலைவனாகத் தெரிவு செய்யப்பட்டேன் திரு மு திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த காலத்திலேயே அவரது நிரந்தரக் காரியதரிசி ஒருவாரகாலம் பருத்தித் துறையில் வந்து தங்கிநின்று எனது தலைமையிலான உள்ளூராட்சிமன்ற நிர்வாகம் பற்றி பூரண விசாரணையொன்றை நடத்தி அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பித்தார்.'

இதன்பின்னர் நீதியரசர் திரு எஸ் ஆர். விஜயதிலகாவின் கேள்விகளுக்குப் பதிலளித்த திரு என் நடராசா பின்வருமாறு கூறினர்.

தேர்தல் முடிந்து இரண்டு நாட்களுக்குப்பின் தேர்தல் ஆட்சேபனைவழக்குத்தாக்கல் செய்யவேண்டுமென்று தீர்மானித்தோம், சிறுமி மனோரமாபேசியதைப்பற்றிதமிழ் உத்தியோகத்தர்களை நான் கேட்கவில்லை அதற்கு காரணம் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள்மீது எனக்கு நம்பிக்கையில்லை திரு ராசேந்திரம் என்றபொலிஸ் உத்தியோகத்தரைக் கேட்டபோது மனோரமா பேசியதாக அவர் சொல்லவில்லை.

அடுத்து 43 வயதான திரு ஆசைத்தம்பி திருநாவுக்கரசு (மனுதார்) சாட்சியமளித்தார் இவரது வழக்கறிஞரான திரு வே சி. நடராசாவின் கேள்விகளுக்குப் பதிலளித்து திரு திருநாவுக்கரசு கூறியதாவது:

நான் ஆரம்பகாலம் தொட்டே தமிழ்க்காங்கிரஸ் அனுதாபிதான். காங்கிரஸ்கட்சி அலுவல்கள்காரணமாக திரு நடராசாவின் வீட்டுக்குத் தேர்தல்காலங்களில் பலமுறை போயிருக்கிறேன் 1970ம் ஆண்டு மட்டுமல்லாது அதற்கு முன்புநான் ஆட்சிமன்றத்தேர்தல்வேலைகளில் மட்டும்தான் ஈடுபட்டு வந்தேன். எனக்கும் திரு நடராசாவுக்கும் எந்த விதமான தொழில் முறைத் தொடர்பும் கிடையாது. நான் எந்த நேரமும் நீதிமன்ற வளவில் காணப்படுவேன் என்று சொல்வது சரியல்ல,

மட்டக்களப்பு எம் பி ராஜதுரையின் பேச்சை நான் ஒருபோதும் கேட்டதில்லையாகையால் மேமாதம் 9-ம் திகதி வல்வெட்டித்துறை எஸ்டம்ஸ் பீச்சில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் பேசுவதாக அறிவிக்கப்படவே நானும் அந்தக் கூட்டத்துக்குப் போனேன். திரு ராஜதுரை அந்த ஒரு கூட்டத்தில் மட்டுமே பேசினர். திரு துரைரத்தினமும் மேடையில் சப்பாணிக் கட்டுப்போட்டு அமர்ந்திருந்தார்

இந்தக் கூட்டத்தில்தான் 12 வயதுச் சிறுமி, முழங்காலளவு சட்டை போட்டிருந்த மனோரமாவும் பேசினர். "நான்தான் கொலைசெய்யப்பட்ட அர்ச்சுனராசாவின் மகள் மனோரமா" என்றார். அதன்பின், "என் தகப்பனர், என் தகப்பனர்" என்று தொடர்ந்து பேசாது திக்கியபோது "பாடமில்லாவிட்டால் பார்த்துப் பேசு" என்று திரு. துரைரத்தினம் சொன்னர். சிறுமி மனோரமா கையில் மடித்துவைத்திருந்த துண்டொன்றை பிரித்துப் பார்த்து "தமிழ்க் காங்கிரஸ் கட்சி வேட்பாளரான புரக்டர் நடராஜாதான் என் தகப்பனரைக் கொலைசெய்வித்தவர்; ஆகையால் தமிழ்க்காங்கிரஸ் கட்சி வேட்பாளருக்கு ஓட்டுப்போடாமல், தமிழரசுக் கட்சி வேட்பாளரான துரைரத்தினம் அண்ணவுக்கே ஒட்டுப் போடுங்கள்" என்று பேசினர்

இப்படிப்பேசிய பின் அவரை மேடையைவிட்டு இறங்க திரு துரைரத்தினம் உதவி செய்தார். பார்த்து வாசித்த துண்டையும் கூடவே கையில் எடுத்துக் கொண்டு போனார் மனோரமா. இந்தக் கூட்டத்தில் வேறு பெண்பிள்ளைகள் பாவாடை அணிந்த பிள்ளைகள் யாரும் பேசவில்லை.

"மனோரமா பேசியபின் என்னருகில் மதில்மேல் உட்கார்ந்திருந்த துரைசாமி என்னைச் சுரண்டினர். உங்கள் பருத்தித்துறை புரக்டரைப் பற்றி இப்படி பேசுகிறார்களே" என்று கேட்டார் 'முழுப்பச்சைப் பொய்' என்று நான் சொன்னேன் இந்தப்பேச்சைக்கேட்டதும் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

இதற்கு முன்பு அர்ச்சுனராசாவின் கொலையோடு தமிழ்க்காங்கிரஸ் ஆதரவாளர்களைச் சம்பந்தப்படுத்தி யாரும் பேசியது கிடையாது.

இதன்பின்னர் இதே கூட்டத்தில் திரு. துரைரத்தினம் பேசியபோது திரு. ஜி ஜி பொன்னம்பலத்தைத் தாக்கிப் பேசினர். அப்பொழுது யாரோ ஒரு இளைஞர் மேடையிலேறி துரைரத்தினத்தின் சட்டையைப் பிடித்து உலுக்கி 'பொன்னம்பலத்தைத் தாக்கிப் பேசாதே' என்று சொல்ல கூட்டத்தில் கலவரம் ஏற்பட்டது. பொலிசார் வந்து அந்த நபரை அப்புறப்படுத்தி அழைத்துச் சென்றனர்.

புரக்டர் நடராசாவின் வீட்டுக்கு அடுத்தநாள் காலையில் சென்று மனோரமா பேசியதைப் பற்றிச் சொன்னேன் எவருடையவோ தூண்டுதலின் பேரில் தான் அப்படிப் பேசியிருக்கவேண்டும் என்று சொன்னதோடு பருத்தித்துறை மக்களுக்கு எனது நேர்மை தெரியும், ஆனால் வல்வெட்டித்துறை மக்கள் இதனை நம்புவார்களோ என்றபடி கதைத்தார்.

தேர்தல் முடிந்த இரண்டு, மூன்று நாட்களுக்குப்பின் புரக்டர் நடராசாவை வீட்டில் சென்று சந்தித்தேன்.

மனோரமாவின் ... தான் வல்வெ... மக்கள் மாற... தோல்விக்குக் ... தப் பேச்சுத் ... சொன்னேன்.

வைகாசி ம... திகதி புரக்டர் ... சந்தித்தபோது ... சாமியைப் ப... சொல்லவில்லை ... யரசரின் கேள்... குப் பதிலளி... திருநாவுக்கரசு ...

தொடர்ந்து ... நடராஜாவின் ... குப் பதிலளித்... தாவது:-

தேர்தல் வ... செய்ய வேண்... சொன்னபோது ... வழக்குக்குப் ப... என்னிடம் ப... என்று நடரா... ஞர். என்னிட... 2000 ரூபாய் ... தமிழ்க்காங்கிர... முன்னணி 67... சேர்த்திருந்த... வைத்து வழக்... லாம் என நினை... தத் தொகை ... நான் ... மேல் ... செலவு ... டர் நடராஜா... வேண்டும் என்... போது அவரு... கொண்டார்

இதைத் தெ... துரைரத்தினத்... ஞரான திரு எ... திரா சாட்சியை ... விசாரணை செ... ர்ந்து குறுக்கு... இன்று நடை...

### ப...ல அமைச்...

யாழ்ப்பாண... 'தீவுபகுதி ... குடிநீர்ப் பிர... போக்குவரத்து... யும் விரைவில் ... நடவடிக்... ... காரைநகரையு... பதற்கு பால... தற்கான மு... மேற்கொள்வே...

இவ்வாறு ... எம் பெரேரா... புளியங்கூடல் ... வாலிபர் சங்... வரவேற்புக்கு ... வித்துப் பேசுகை... கண்டவாறு ...

சு. விஸ்வநா... கம். ப. கதிரவே... பலர் இக்கூட்ட... யாற்றினர்.

### புதி... முகாமை...

கோட்... திரு, ஏ பி. ... கிழக்குஇலங்... கூட்டுத்தாபன... மனேஜராகத் ... செய்யப்பட்... இவர் முன்பு ... கைத்தொழில் ... தாபனத்தின் ... வும் இருந்தன்...

### கிழ. மாகி... குழப்ப... 20 பேர்...

டாக்க... கிழக்குப் ... கடந்த சில ... நடைபெற்று... முறைச் சம்ப... பது பேர் ... தாகவும் 100 ... காயமடைந்... சொல்லப்படு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...சேப
...ம

...வின் பேச்சிஞல்
...ல்வெட்டித்துறை
...மாறிவிட்டார்கள்
...துக் காரணம் இந்
...சுத் தான் என்று
...ன்.

...மாதம் 10-ம்
...டர் நடராசாவை
...ாது நான் துரை
...பற்றி ஒன்றும்
...லை என்று நீதி
...கேள்வியொன்றுக்
...லளித்தார் திரு.
...ரசு
...ந்து திரு. கே சி
...ின் கேள்விகளுக்
...ளித்துக் கூறிய

...வழக்கு தாக்கல்
...ண்டும் என்று
...ாது தேர்தல்
... பணம் தேவை
...பணம் இல்லை
...ராஜா சொன்
...னிடம் சுமார்
...ய் இருந்தது
...கிரஸ் வாலிப
... 6700 ரூபாய்
...த்து இதனை
...ழக்கு நடத்த
...நினைத்தேன், இந்
...போதுமென்று
...கவில்லை ...க்கு
...வு வந்தால் புரக்
...ஜா கொடுக்க
...என்று சொன்ன
...வரும் ஏற்றுக்

...தொடர்ந்து திரு
...த்தின் வழக்கறி
... என் சத்தியேந்
...சிலைக் குறுக்கு
...செய்தார் தொட
...க்கு விசாரணை
...டபெறும்.

......

...லம்
...க்கப்படும்

...ாணம், வெள்ளி
...தி மக்களின்
...பிரச்சினையையும்,
...த்துப்பிரச்சினையை
...ில்தீர்த்துவைக்க
...எடுப்பேன்.
...த்துறையையும்
...ரயும் இணைப்
...ாலம் அமைப்ப
...முயற்சிகளையும்
...வேன்'
...டாக்டர் என்.
...ரா அண்மையில்
...ல் சமசமாஜ
...ங்கம் அளித்த
...கு நன்றி தெரி
...கையில் மேற்
...தெரிவித்தார்.
...நாதன், நாகலிங்
...வேலு உட்பட
...ட்டத்தில் உரை

...திய
...மையாளர்

...ட்டை, வியாழன்
... பதமபெருமா
...யைக் காகிதக்
...னத்தின் புதிய
...த் தெரிவு
...ட்டுள்ளார்
... தேசிய சிறு
... கூட்டுத்
... மனேஜராக
...ள்ளார்,

...கிஸ்தான்
...பத்தில்
...ர் பலி

...கா, மார்ச் 25
...பாகிஸ்தானில்
... தினங்களாக
...ந்த வன்
...வங்களில் இந்
...கொல்லப்பட்ட
...0 பேருக்குமேல்
...ந்ததாகவும்
...கின்றது.

# 'ஜனநாயகத்தின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும்'

## சிவாஜிகணேசன் கூறுகிறர்

சென்னை, மார்ச் 25

"மக்கள் தீர்ப்புக்கு மதிப் பளிக்கவேண்டும், ஜனநாய கத்தின் தீர்ப்பை நாம் ஏற் றுக்கொள்ளவேண்டும் இந் தேர்தல் முடிவுகள் ஒரு சில நிமிடத்திற்கு எனக்கு அதிர்ச்சி அளித்தாலும் பிறகு நான் அதைப்பற்றி பெரிதாக நினைக்கவில்லை

தமிழ் நாட்டு தேர்தல் முடிவுகள்பற்றி சின்டிகேட் காங்கிரஸிற்கு தீவிரமாக தேர்தல் பிரசாரம் செய்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மேற்கண்டவாறு கூறினார்

தேர்தல் பணிகளினை உடல்நலமில்லாமல், நர்ஸிங் ஹோமிலிருந்த சிவாஜிகணேசன் வீடு திரும்பி ஓய்வு எடுத்து வருகிறார்

சிவாஜிகணேசன் தமது ஆதரவாளர் மத்தியில் மேலும் கூறியதாவது நாம் ஆற்றிய பணிபோதாது இன்னும்மக்களுக்கு சேவைகள் செய்து அவர்களின் நம்பிக்கையைப் பெறவேண்டும் தேர்தல் முடிவுகளால் சோர்வடைந்துவிடக்கூடாது தேர்தல் முடிவுகள் பற்றி கவலைப் படாது உற்சாகத்துடன் மக்கள் சேவையில் ஈடுபட வேண்டும்,

வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் பொதுப் பணிகளில் ஈடுபடுவேன் இனி மேல்தால் நான் உற்சாக மாக பணியாற்றவிருக் கிறேன் எனக்குயார்மீதும் தனிப்பட்ட கோபமோ யாரையும் எதிர்க்கவேண்டியது அவசியமோ இல்லை இருப்பினும், மக்கள் நன்மைக்காக அடிக்கடி தமிழகத்தில் சுற்றுப் பிரயாணம் செய்வேன்.

# வெறி நாய்க்கடி: சில யோசனைகள்

( டாக்டர் எல். என். ரொமனேவா )

(புதுடில்லி கலாவதி சிறுவர் மருத்துவமனையில் சோவியத் செஞ்சிலுவைச்சங்கமும், செம்பிறை சங்கமும்நடத்தும்குழந்தைகள்நோய் ஆராய்ச்சிக் கேந்திரத்தைச்சேர்ந்தவர் எழுதுவது)

வெறிநாய்க்கடி நரம்புமண்டலத்தைப் பாதிக்கக்கூடிய ஒரு தொற்றுநோய் பைத்தியம்பிடித்த சிலவகைபிராணிகள், முக்கியமாக நாய்கள் கடிப்பதன்மூலம் அல்லது அவற்றின் எச்சிலின் மூலம் இந்தநோய் பீடிக்கிறது.

ஒருவித வைரசே இந்த நோய்க்குக் காரணம் கடிபட்ட பகுதியின் வழியாக இந்த வைரஸ்மத்தியநரம்பு மண்டலத்திற்குள் பிரவேசித்து அங்கு நரம்பு திசுக்களின் செல்களில் பல்கிப்பெருகிறது.

நோய் நுண்மபெருக்கநிலை பெரும்பாலும் 20முதல் 40 மாதங்கள் நீடிக்கும். சில அபூர்வமான சந்தர்ப்பங்கள் ஒருவருடத்திற்குஅதிகமாக நீடிப்பதும் உண்டு உடம்பில் கடிபட்ட இடத்தையும் நோயாளியின் வயதையும் இது பொறுத்துள்ளது. முகத்திலோ, தலையிலோகடி ஏற்பட்டிருந்தால் நோய் நுண்ம பெருக்கநிலை சிறிதுகாலமே நீடித்திருக்கும்.

பொதுவான உடல்நலக் கோளாறு. கடுமையான காய்ச்சல், கடிபட்ட இடத்தில்வலி. அந்த இடத்திலும் அதனைச் சுற்றிலும் நரம்புகள் பாதிப்பு ஆகியவற்றுடன் இந்த வியாதி ஆரம்பமாகும். இதனைத் தொடர்ந்து மனக்கோளாறுகள், தண்ணீர்குடிக்கும்போது தொண்டையில் இசிவு முதலியன ஏற்படும். பின்னர் தண்ணீரைக் கண்டமாத்திரத்திலேயே இசிவு ஏற்படும் இதனைத்தான் வெறிநாய் கடியை நீர்வெறுப்பு நோய் என்று கூறுகிறார்கள். இதற்கப்புறம் கிட்டத்தட்ட தசைநார்கள் அனைத்தும் ஆற்றலிழந்து நோயாளி இறக்க நேரிடும் வெறிநாய்க்கடிக்கு மருந்துகள் அவ்வளவாகப் பலனளிக்கமாட்டா.

இந்த நோய்க்கு எதிரான ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திட்டமிட்டு தடுப்பு ஊசிகள் போடுதல். தெரு நாய்களைக்கொல்லுதல் அல்லது அவற்றை தனிமைப்படுத்தி வைத்தல் போன்ற காரியங்களைச்செய்வது நல்லது.

சுகவீனமுற்ற ஏதாவது ஒரு பிராணி கடித்தாலல்லது அதன் எச்சில் உடம்பில்பட்டால்பாதிக்கப்பட்ட இடத்தைஉடனே சோப்பையும் அயோடினையும் கொண்டுநன்றாய்க்கழுவிவிட வேண்டும். பிரத்தியேக கம்மாகுளோபுலின் ஊசிபோட வேண்டும்.

வெறிநாய்க்கடி விஷயத்தில் நோய் நுண்ம பெருக்க நிலை நீண்ட காலம் நீடிப்பதால் வெறிநாய்க்கடி - எதிர்ப்பு ஊசிகளை உடனேபோட்டுக்கொள்ள ஆரம்பித்துவிட வேண்டும் நோய் கடுமையாக இருந்தால் வெறிநாய்க்கடி - எதிர்ப்பு கம்மாகுளோபுலின் ஊசிகள் போட்டுக்கொள்ளவேண்டும், எத்தனை ஊசிகள் போட்டுக்கொள்வது என்பதை ஒரு டாக்டர் தான்தீர்மானிக்கவேண்டும்.

சம்பந்தப்பட்ட பிராணியை அவ்வப்போது கவனித்துவரவேண்டும் ஏனென்றால் அது உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதாகத் தெரிந்தால் தொடர்ந்து வெறிநாய்க்கடி-எதிர்ப்பு ஊசிகள் போட்டுக்கொள்வது விரும்பத்தக்கதல்ல, அவற்றைப் போட்டுக்கொள்வதை நிறுத்திவிட வேண்டும்

உரியகாலத்தில்டாக்டரை கலந்தாலோசித்தால் உயிருக்கு ஆபத்துஏற்படாமல் தடுக்கலாம்

———

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று அரியாலை சித்தி விநாயகர் ஆலயத்தில் திரு கிரிதாரிபிரசாத் 'அன்பு நெறி' என்னும் பொருள் பற்றி உரையாற்றவுள்ளார்.

## 15 ஆயிரம்பேரை கொன்றார்களாம்

ஹனோய், மார் 25

லாவோஸுக்குள் புகுந்து ஹோ - சி - மின் 'சப்ளை' வழிகளை தடை செய்வதற்கு முயற்சி எடுத்த தென் வியட்னும் படைகள்- 300 அமெரிக்க சிப்பாய்கள் உட்பட 15ஆயிரம் பேரைக் கொன்றொழித்ததாகவும் 1000 வாகனங்களை துவம்சம் செய்ததாகவும் 5000 போர்க் கருவிகளைக் கைப்பற்றியதாக வும் கம் யூனிஸ்டுகள் அறிவித்துள்ளனர்.

# வெளிநாட்டிலுள்ள டாக்டர்கள் திருப்பியழைக்கப்படுவர்!

## உதவி சுகாதார அமைச்சர் தகவல்

கோட்டை, வியாழன்

டாக்டர்களைச் சேவைக்கு எடுப்பது சம்பந்தமான கொள்கையில் தீவிரமான மாற்றங்களைச் செய்வதற்கு அரசாங்கம் உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

வெளி நாடுகளிலிருக்கும் இலங்கை டாக்டர்களைத் திருப்பியழைத்து இங்கு சேவையில் அமர்த்திக் கொள்ள அரசாங்கம் உத்தேசித்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

இலங்கையிலும் வெளி நாடுகளிலும் பயிற்சிபெற்ற இலங்கையர்களான டாக்டர்களுக்கு வேலைவாய்ப்புகளை அரசாங்கம் ஏறபடுத்திக்கொடுக்கமுடிவுசெய்துள்ளதாக உதவிச் சுகாதார அமைச்சர். திருமதி சிவா ஒபயசேகரா தெரிவித்திருக்கிறார்

முன்னைய அரசாங்கம் ஆட்சியில் இருந்தபொழுது பயிற்சிபெற்ற டாக்டர்கள் அனைவரையும் சேவையில் அமர்த்திக்கொள்ள அது தவறிவிட்டதென்றும் அந்த அரசாங்கம் அளித்த சலுகைகளின்பேரில் அநேக டாக்டர்கள் வெளிநாடுகளுக்குப் போய்விட்டார்கள் என்பது கிடைக்கக் கூடிய தகவல்களிலிருந்து தெரியவருகிறதென்று உதவி அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

# 'தமிழ்க் காங்கிரஸ் அரசுடன் ஏன் சேர்ந்தது?

## அருளம்பலம் விளக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழர் ஒற்றுமை முன்னணியின் ஒன்பது அம்சக் கோரிக்கையை அரசியல் நிர்ணயசபையில் கொண்டு வருதற்கு தமிழரசார் மறுத்துவிட்டார்கள் 9 அம்சக் கோரிக்கையை கொண்டு வந்திருந்தால் நிச்சயம் நாம் ஆதரித்திருப்போம் 9 அம்சக் கோரிக்கையை கைவிட்டு சமஷ்டிக் கோரிக்கையைதிருத்தப்பிரேரணையாக தமிழரசார் கொண்டு வந்தால் தான் நாங்கள் அரசாங்கத்தில் சேர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

தமிழ் காங்கிரஸ் ஆட்சி மன்ற குழு தலைவரும் நல்லூர் எம். பி. யுமான திரு: சி அருளம்பயம் நமது நிருபரிடம் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

திரு, அருளம்பலம்மேலும் கூறியதாவது: தமிழர் ஒற்றுமை முன்னணிக்கு மாறாக நடக்கவில்லை 9 அம்சக் கோரிக்கையை ஆதரிக்க எப்பொழுதும் தயாராக இருந்தோம். ஆனல் தமிழரசார் வழக்கம் போல் ஒற்றுமையை குலைத்துவிட்டார்கள். தமிழ் காங்கிரஸ் ஆரம்பித்த நாள் முதல் தான் இணைக்காரியதரிசியாக இருந்துவருகிறேன் தமிழரின்ஒற்றுமைக்கு ஒவ்வொரு தடவையும் தமிழரசாரே குழி தோண்டி வந்திருக்கிறார்கள் இதனல் தான் வல்வெட்டித்துறையில் தமிழர் ஒற்றுமை முன்னணி கூட்டம் நடந்த போது இந்த ஒற்றுமை முன்னணி உருப்படாது என்று கூறியிருந்தேன் அது இன்று சரியாகி விட்டது.

தமிழரசாரின் திருத்த பிரேரணைக்குள் 9 அம்சக் கோரிக்கையும் அடங்கியிருப்பதாக தமிழரசார் இன்று கூறிவருகின்றனர் அப்படியானல் இதனைவக்கவட்டிக் கட்டத்திலேயே கூறியிருக்கலாமே தமிழரின் ஒற்றுமையை குதி தங்களின் சமிஷ்டிகோரிக்கையை வாபஸ் பெற்று 9 அம்சக் கோரிக்கையை கொண்டு வந்திருக்கலாமே,

அரசியல் நிர்ணயசபையில் 9 அம்சக்கோரிக்கையை கொண்டுவரும் [illegible] படியும் அதனை ஆரம்பிக்கும்படியும் நான் தமிழரசு எம் பி யை கேட்டபோது அவர் மறுத்துவிட்டார் சமஷ்டி கோரிக்கையை கைவிடமாட்டோம் என்று தமிழரசு கட்சித்தலைவரும் கூறிவிட்டார் அதனல் இனிமேல் ஒற்றுமைபற்றி பேசிபயனில்லை,

தமிழ் மொழியை பாதுகாக்கவும் தமிழ் மக்களின் கௌரவத்தை பாதுகாக்கவும் அரசாங்கம் தயாராக இருக்கிறது அரசாங்கத்துடனஒத்துழைத்து தமிழர் உரிமைகளை பெறுவ தாடு தமிழ் பகுதிகளின் பொருளாதாரத்தை வளர்க்கவும் முயற்சிப்போம்.

## இவர்களேயும ஏற்ற அனுமதி

சாவடி, வியாழன்

காலையில் சங்கானையிலிருந்து புறப்படும் பாடசாலைச் சேவை பஸ்ஸில் பிரயாணிகளையும் ஏற்றிச் செல்லுமாறு இ. போ. ச. முகாமையாளர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சங்கானை - யாழ்ப்பாணம் குறுகிய பஸ் சேவை, தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதால் காலையில் கந்தோருக்குச் செல்லும் உத்தியோகத்தர்களும் பலதொழிலாளர்களும் நேரத்துக்குச் செல்லமுடியாமல் அவஸ்தைப்படுவதாக சங்கானை பிரயாணிகள் ... இ. போ. ச. த்தில் புகார் செய்திருந்தது.

# பண்ணுகம் மெய்கண்டான் வித்தியாசாலை அதிபர் திரு. செ. ஸ்ரீநிவாஸன்



இளமையான எண்ணம். இளமையான பேச்சு, இளமையான செயல் இவற்றிற்குரியவரான ஒரு முதியவர் தான் திரு ஸ்ரீநினிவாசன்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே வாழுகின்றவர்களுக்கு என்றும் நினைவூட்டக்கூடியதான வழக்கமபரை அம்மனையே பார்த்தபடி வாசல் அமைந்திருக்கும் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் அதிபராகக் கடமை புரிந்து அம்மகாவித்தியாலயத்தின் சரித்திரத்தில் நிலையான இடத்தைப்பெற்றுத் திகழ்பவர் இவர்.

திரு ஸ்ரீநிவாசனின் பெயர் கல்வியுலகில் நிரந்தரமான ஞாபகத்தை ஏற்படுத்தும் பெயராகும் அதிபர் என்ற சொல்லுக்கு ஆதர்ச உருவமாகத் திகழ்ந்தவர் இவர். ஆசிரிய உலகுக்கு வழிகாட்டி முன்சென்ற ஒருவர் இவர் என்று பலர் பாராட்டுவதில் கடுகத்தனையும் தவறிருக்க முடியாது.

ஐந்தரை மணித்தியாலந் தான் கடமைசெய்யும் கால அளவாகக் குறிக்கப்பட்டிருப்பினும், அந்த கால எல்லையைமீறி பண்ணுகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் கல்வி ஒலி ஒலித்துக் கொண்டிருந்தது.

கடமையென்பது வாங்கும் ஊதியத்துக்குத்தக அமைதல் என்பதுகூட புறக்கணிக்கப் பட்டுவரும் இக்நாளில் வெறுமனே ஊதியத்தை மட்டும் கருதாது தமது வாழ்வின் இலட்சியமாக அது அமையவேண்டுமென்ற மேலான பண்பாடு இவரிடமிருந்துவந்தது.

மாணவர்கள் நலனை மட்டும் கருத்திற் கொள்ளாது சக ஆசிரியர்களின் முன்னேற்றத்துக்கும் உறுதுணையாக இவர்விளங்கியுள்ளார்.

கடமையில் கருத்து கண்டிப்பு இத்தனையும் இருந்த இவரது அன்புள்ளத்தை மாணவர்களே நன்குபுரிந்து கொண்டமையால் தாய்ப் பசுவைக்கண்ட கன்றென மாணவர் இவர்முன் தவிச் சென்றனர். நேரிய நெஞ்சத்தில் ஊற்றெடுக்கும் கடமை உணர்வு, பயன்கருதாத பண்பு ஆகியன இவரிடம் கற்ற மாணவர்களுக்கு நல்ல உளப்பண்மையும் ஊக்கத்தையும் ஊட்டியுள்ளன.

தொடர்ந்து பணியாற்ற முடியாதவாறு குறிப்பிட்ட காலவரையறையின் பேறாக அவர் அதிபர் பதவியினின்றும் ஓய்வு பெற்றுள்ளார். ஆனல் தொண்டுள்ளம் சும்மா இருக்குமா? நாட்டிற்கு பலபயன் விளைக்கப் பிரார்த்திப்போமாக.

[திரு. செ. ஸ்ரீநிவாசனின் சேவைநலம் பாராட்டுவிழா 25-3-71ல் பண்ணுகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது ]

— ஓர் அன்பன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சென்றல் — சென்.ஜோன்ஸ் கிரிக்கெட் மோதல்:

# வீரர் மகேந்திரனின் சாதனை

## வெற்றி - தோல்வியின்றி ஆட்டம் முடிவடைந்தது!

[நமது நிருபர் 'தேவா']

யாழ்ப்பாணம், வெள்ளி
சென்றல்-சென். ஜோன்ஸ் கல்லூரிகளிடையே நடைபெற்ற 73-வது வருடாந்த கிரிக்கெட் போட்டி, வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டியின் ஆரம்பத்தில், இரு கோஷ்டித் தலைவர்களிடையேயும் நடைபெற்ற 'நாணயச் சுண்டலில்' சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. இக்கோஷ்டியினர், ஆட்டம் தொடங்கி முடிவடையும் வரை தமது ஓட்டங்களை மிகவும் நிதானமாகவே எடுத்தவண்ணம் இருந்தனர் இவர்கள் தமது முதல் 50 ஓட்டங்களை 95 நிமிடங்களிலும், 100 ஓட்டங்களை 175 நிமிடங்களிலும் பெற்றனர். ஈற்றில் இவர்கள் தமது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 149 ஓட்டங்களை 255 நிமிடங்களில் பெற்றனர். இதில் எஸ். ஸ்ரீராமரத்தினம் 36 ஓட்டங்களையும், என். நவீனன் 28 ஓட்டங்களையும், காப்டன் ரி. தேவபாலன் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

மத்திய கல்லூரியின் பந்தெறி வீரர்களான ஜே.கே. பிரேமச்சந்திரன் 21 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளையும், வி. சிவசுப்பிரமணியம் 33 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்

மத்திய கல்லூரி தனது முதல் இன்னிங்ஸை துடுப்பெடுத்தாட ஆரம்பித்ததிலிருந்து முடிவடையும் வரை ஓட்டங்களை 'மின்னல்' வேகத்தில் பெற்ற வண்ணமே இருந்தனர் இவர்கள் தமது முதல் 50 ஓட்டங்களை 60 நிமிடங்களிலும், 100 ஓட்டங்களை 106 நிமிடங்களிலும், ஈற்றில் 9 விக்கெட்டுகளை இழந்ததும் ஆட்டத்தை நிறுத்திக் கொள்ளும் போது 189 ஓட்டங்களையும் 179 நிமிடங்களிலும் பெற்றனர்,

### புதிய சாதனை

இதில் வீரர் ரி. மகேந்திரன் ஆட்டமிழக்காது 100 ஓட்டங்களை எடுத்து 1955-ம் ஆண்டிலிருந்த பழைய சாதனையை முறியடித்து ஓர் புதிய சாதனையை ஏற்படுத்தினூர். இவர் தமது 100 ஓட்டங்களையும் 125 நிமிடத்தில் பெற்றூர்.

வீரர் மகேந்திரன் தனது 100 ஓட்டங்களையும் எடுக்கும் வரை, தான் ஆட்டமிழக்கக் கூடிய விதத்தில் எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் எதிர்க் கோஷ்டியினருக்குக் கொடுக்காது குறிப்பிடத்தக்கது. மத்திய கல்லூரிக் கோஷ்டியின் மற்றைய துடுப்படி வீரரான டி ஜே நைல்ஸ் மிகவேகமாக 35 ஓட்டங்களைப் பெற்றது ரசிப்பாக இருந்தது.

முதல் இன்னிங்ஸில், சென். ஜோன்ஸ் கோஷ்டியைக் காட்டிலும் யாழ் மத்திய கல்லூரி 40 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றது.

சென். ஜோன்ஸ் கோஷ்டி தனது 2-வது இன்னிங்ஸை துடுப்பெடுத்தாட ஆரம்பித்த போது இவர்கள் 4 விக்கெட்டுகளை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றனர். இதன் பின் காப்டன் தேவபாலனும், சுகுமாரும் சோடிசேர்ந்து ஆடி தமது ஓட்டங்களின் எண்ணிக்கையை 109 ஆக உயர்த்தியபோது சுகுமார் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன் பின் இவர்கள் 6 விக்கெட் நஷ்டத்துக்கு 139 ஓட்டங்களை எடுத்த போது, தேவபாலன் 65 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வீரர் தேவபாலனின் துடுப்படி மிகச் சிறப்பாக இருந்தது மட்டுமின்றி தமது கோஷ்டிக்கு ஏற்பட இருந்த ஆபத்தையும் போக்கிக் கொண்டார்.

சென். ஜோன்ஸ் கோஷ்டியினர் தமது 2-வது இன்னிங்ஸில் 7 விக்கெட் நஷ்டத்துக்கு 143 ஓட்டங்களைப் பெற்றதும் தமது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டனர்.

மத்திய கல்லூரியினர் இப்போட்டியில் வெற்றி பெறுவதற்கு 104 ஓட்டங்களை 23 நிமிடங்களில் பெற வேண்டியிருந்தது. ஆனால் ஆட்டம் முடிவடையும் போது இவர்கள் 4 விக்கெட்டுகளை இழந்து 38 ஓட்டங்களை மிக வேகமாகப் பெற்றனர் வீரர் நைய்ஸ் மின்னல் வேகத்தில் 26 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

ஸ்ரீ ராமரத்தினம் 18 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தினூர்.

### ஆட்டத்தை மந்திரி பார்வையிட்டார்

சென்றல்- சென்.ஜோன்ஸ் கல்லூரிகளின் கிரிக்கெட் போட்டியின் இறுதிநாள் ஆட்டத்தை விளையாட்டமைச்சர் திரு. வே. பி. ரட்ணுயக்கா பார்வையிட்டார் மந்திரி ஆட்டத்தை பார்ப்பதற்கு வந்த போது, இரு கல்லூரிகளின் அதிபர்களும் அவரை வரவேற்றனர் இதன் பின் இருகல்லூரி வீரர்களும் நடைபெற்ற தேனீர் இடைவேளை வைபவத்திலும் மந்திரி கலந்து கொண்டார்.

திரு. ரட்ணுக்கா, சென். ஜோன்ஸ் கல்லூரியின் ...

### பிள்ளைகள் ....

(3-ம்பக்கத்தொடர்ச்சி)

கடற்கரை வந்தடைந்ததும் இவர்கள் காம்பெற்ற தகவல்களை மூலமாகக்கொண்டு அவற்றையெல்லாம் நேரில் காணுகின்றனர். இப்படிப் பெறப்படும் அறிவு மாணவரின் மனதைவிட்டு என்றென்றும் நீங்கா நினைவுகளாக இருக்கும் என்பதுஐயமில்லை.



## கையிருப்பில் கிடைக்கும்

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

WALKER-WOLSELEY

நீர்ப்பாசன பம்புகள்

★ மணிக்கு 10,000 கலன்
★ குறைந்த இயக்கச் செலவு
★ பராமரிப்புச் சுலபம்



2" பெற்ரோல் / மண்ணெண்ணெய் பம்ப்

நீர்ப்பாசன, மற்றும் பொதுவான இறைப்பு வேலைகளுக்கான பிரசித்திபெற்ற நம்பகமான வாக்கர் வூல்ஸிலி பெற்ரோல்/ மண்ணெண்ணெய் யந்திரங்கள் இப்பொழுது வாக்கர் இண்டஸ்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட்டால் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன.

WI வாக்கர் இண்டஸ்ரீஸ் தயாரிப்பு

பக்கபலமான பராமரிப்பு ஊழியர்களுடன் சகலவித உதிரிப்பாகங்களும்:

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

இல; 37/39, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்
தொடர்பு கொள்க:
திரு: ஏ. சி. ஜோசெப் (மனேஜர்)
தொலைபேசி: 7031


## 'நாட்டின் வளம் செழிக்க தொழிலாளர் உதவவேண்டும்'

யாழ்ப்பாணம், வெள்ளி
"ஒரு நாட்டினது அபிவிருத்தியால் உண்டாகும் ஆக்கமும் அந்த நாட்டின் வறுமையால் உண்டாகும் வரட்சியும் தனிப்பட்ட ஒரு பிரஜைக்கே உரியதல்ல. அந்த நாட்டில் வாழுகின்ற சகல பிரஜைகளையுமே நன்மையும் தின்மையும் சார்கின்றன. எனவே நாட்டில் வாழுகின்ற பிரஜைகளாகிய ஒவ்வொருவரும் இனம், சாதி ஆகிய யாகுபாடற்று ஒரே மனதுடன் நாட்டின் வளர்ச்சிக்கு ஒத்துழைக்க வேண்டும் இதனால் நாட்டில் நன்மை நிச்சயம் ஓங்கும் முன்னேற்றமும் கிடைக்கும்"

இவ்வாறு யாழ். அரசாங்க பொதுச் சேவைத் தொழிலாளர் சங்கத்தினது யாழ். கிளையின் 22-வது ஆண்டு நிறைவு விழாவிற்குத் தலைமை வகித்துப்பேசிய அரசாங்க அதிபர் திரு. எம் டி. டபிள்யூ அமரசேகரா தெரிவித்தார்

இம்மாநாட்டில் அரசாங்க உதவி அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை உதவியாணையாளர் திரு. கே. சபாரத்தினம், திரு சி ஆறுமுகம், திரு பியதாஸ அதிப்பொல, திரு வி. குமாரசாமி, திரு வி. இராசையா, திரு என். முருகேசு, திரு. ஆ. பாலசுந்தரம் பீற்றர் முத்தையா ஆகியோரும் உரையாற்றினர்.

சங்கம் ஆற்றிய சேவைகளை விளக்கும் அறிக்கையும் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. (கு வி·ம)

## மாணவர் சுற்றுலா

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ். வசாவிழான் குட்டியப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள முக்கியமான இடங்களைப் பார்வையிட்டனர்.

கண்ணாடித்தொழிற்சாலை, நூதனசாலை, சிமெந்துத் தொழிற்சாலை, ஐஸ்தொழிற்சாலை, விமானநிலையம் மின்தறி நெசவு நிலையங்கள், யாழ் புகையிரத நிலையம், யாழ்ப்பாணம் பூங்கா 'ஈழநாடு' பத்திரிகாலயம் ஆகிய இடங்களை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் விளக்கினர்.

இச்சுற்றுலாவுக்கு தலைமை ஆசிரியர் திரு ஏ. சிவபாதம் தலைமையில், உதவி ஆசிரியர்கள் திருவாளர்கள் ரி. சாமுவேல், பி. செல்வராசா ஆகியோர் பொறுப்பாயிருந்தனர்.

0 0 0

யாழ்ப்பாணம், வெள்ளி
சுன்னுகம் கோட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவ மாணவிகள், ஆசிரியர்களின் தலைமையில் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள முக்கிய இடங்களைப்பார்வையிட்டனர்.

பலாலி விமானநிலையம், வசாவிளான் ஞேசரி ஆச்சிரமம், மாவிட்டபுரம் வாளித் தொழிற்சாலை, காங்கேசன்துறை, சிமெந்துத் தொழிற்சாலை, மயிலிட்டி ஐஸ் தொழிற்சாலை, சோப்பாய் கண்ணாடித் தொழிற்சாலை 'ஈழநாடு' பத்திரிகாரியாலயம் ஆகியமுக்கிய இடங்களைப் பார்வையிட்டனர். குறிப்பிட்ட இடங்கள்பற்றி மாணவர்களுக்கு விளக்கங் கொடுக்கப்பட்டது.

0 0 0

யாழ்ப்பாணம், வெள்ளி
சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள முக்கியமான இடங்களை பார்வையிட்டனர்,

இச்சுற்றுலாவுக்கு ஆசிரியர்கள் திருவாளர்கள் துரைராஜா, வி. கோவிந்தசாமி, என் நல்லதம்பி திருமதி ஆர் திருச்சிற்றம்பலம், திருமதி. ஈ. சுப்பிரமணியம் ஆகியோர் பொறுப்பாயிருந்தனர்.

விமானநிலையம். ஞேசரி ஆச்சிரமம் வாளித்தொழிற்சாலை, கீரிமலை ஐஸ்தொழிற்சாலை கண்ணாடித் தொழிற்சாலை மின்தறி நெசவுநிலையம் ஓலைடன் தொழிற்சாலை கோட்டை ஈழநாடுகாரியாலயம், யாழ். புகையிரதநிலையம்' பூங்கா ஆகியஇடங்களை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் விளக்கினர். (கு. வி. ம)

### பணமுடிச்சு அன்பளிப்பு

யாழ் மத்திய கல்லூரியின் வீரர் ரி. மகேந்திரன், ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களை எடுத்து ஓர் சாதனையை ஏற்படுத்தியமைக்காக பல ரசிகர்களும், பழைய மாணவர்களும் அவருக்கு பணமுடிச்சுக்களை அன்பளிப்புச் செய்தனர்.

## யூனியன்-ஸ்கந்தா கிரிக்கெட்

மாவிட்டபுரம், வியாழன்
தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டிவெற்றி தோல்வியின்றி முடிந்தது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் போட்டி நடைபெற்றது. முதல் ஆட்டத்தில் ஸ்கந்தா சகல விக்கட்டுகளையும் இழந்து 107 ஓட்டங்களையும் யூனியன் கல்லூரி சகல விக்கட்டுகளையும் இழந்து 204 ஓட்டங்களையும் பெற்றன.

இரண்டாவது ஆட்டத்தில் ஸ்கந்தா 9 விக்கட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றபோது நேரமின்மையால் ஆட்டம்நிறுத்தப்பட்டு வெற்றி தோல்வியின்றி போட்டிமுடிவதாக அறிவிக்கப்பட்டது,

முதலாம் ஆட்டத்தில் யூனியன் கல்லூரி வீரர்செல்வன் ஜே. கனகசபை 107 ஓட்டங்களைப்பெற்று ரசிகர்களின் பாராட்டைப் பெற்றூர்.

இப்போட்டிக்கு திருவாளர்கள் நேசதுரை, நவம் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

## மகியங்கனையிலும் கல்வி பாதிப்பு

பதுளை, வியாழன்
மகியங்கனைத் தொகுதியிலுள்ள இரு பாடசாலைகள் ஆசிரியர் பற்றாக்குறையினல் மூடப்பட்டுள்ளன. திம்பிரணவித்தியாலயம் வத்தவன வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளுமே மேற்குறிப்பிட்ட பாடசாலைகளாகும். இவ்விருபாடசாலைகளிலுமிருந்து ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். அந்த இடத்துக்கு புதிய ஆசிரியர்கள் வராமையால் ஏராளமான பிள்ளைகளின் கல்வி நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக அவ் வட்டார பெற்றூர்கள் கல்விஇலாகாவுக்கு அறிவித்துள்ளனர்.

இவற்றை அடுத்துள்ள பெத்தியகொட வித்தியாலயத்தில் அதிபர் மாத்திரம் எட்டு வகுப்புக்களை ஒரேநேரத்தில் கவனித்து வருகிறூர். இப் பாடசாலையிலிருந்து ஏழு ஆசிரியர்கள் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகாசனவகுப்பு

திருகோணமலை, வியாழன் சடந்த வாரம் திருமலை சிவயோக சமாஜ யோகா சிரமத்தில் யோகாசன வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தஜி நடத்தி வருகிறார்.

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 13-ம் திகதி (26-3-71)

மேடம்- வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம். வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று.

இடபம்- இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம்பெறும். சிலருக்குப் புதிய வாகனம் கிடைக்கலாம்.

மிதுனம்- மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம். கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு.

கடகம்- நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படலாம். சமயோசித புத்தியினால் எதையும் சமாளிக்கலாம்.

சிம்மம்- காதல் விவகாரங்கள் தலைதூக்கும். இனிமையான சம்பவங்கள் இடம்பெறும். கண்ணியமான தினம்.

கன்னி- புதிய தலைபிடி தலைதூக்கும். வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும்.

துலாம்- பிதாவழி மூலம் பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறும். இன்று தித்திப்பான தினம்.

விருச்சிகம்- புண்ணிய காரியங்களில் அதிக ஈடுபாடு ஏற்படும். பொதுத்துறையில் அதிகம் ஆர்வம் காட்டுவீர்கள்.

தனுசு- பலவழிகளாலும் பண வரவுக்கு இடமுண்டு. வழக்கறிஞர்களுக்கு இன்று மகிழ்ச்சிகரமான தினம்.

மகரம்- ஏமாற்றத்தின் தாக்குதல் உங்களுக்கு சோர்வைத் தரலாம். குடும்பத்தில் சிறிய பூசல்கள் தலைதூக்கலாம்.

கும்பம்- ஆசை அலைகள் மோதும். வாழ்க்கையில் நிம்மதியற்றநிலை தென்படும். மனஅடக்கம் விரும்பத்தக்கது.

மீனம்- வாழ்க்கையில் ஏற்படும் திடீர் திருப்பம் திரவியலாபத்தை கொண்டு வரலாம். நண்பர்களின் ஆதரவும் கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 26-3-71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணிசைத்தமிழ் 7-45 திரை இசை 8-00 குர்-ஆன், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344மீ அன் 49 மீ**

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

**344 மீ அன்ட் 61 மீ**

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 திருவையாறு, 7-00 பிறநாட்டு இசை, 7-15 பாட்டு, 7-45 செய்திச் சுருள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு 9-40 நாதஸ்வரம், 10-30 செய்தித்தொகுப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் கிழக்கு ஆசியாவிலேயே யாழ்ப்பாணம் கல்வியில் முதலிடம்

## அமைச்சர் ரத்நாயக்கா கூறுகிருர்

யாழ்ப்பாணம் வெள்ளி தென்கிழக்கு ஆசியாவிலேயே யாழ்ப்பாணம் கல்வியில் மிகமேம்பட்ட பிரதேசங்களில் ஒன்ருகும் என்று யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி பரிசளிப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட விளையாட்டுத் துறை அமைச்சர் திரு ஈ பி இரத்நாயக்கா தெரிவித்தார்

சம்பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் நடந்த பரிசளிப்பு விழாவில் அமைச்சர் இரத்நாயக்கா ஆரம்பத்தில் தமிழில் பேசிவிட்டு பின்னர் ஆங்கிலத்தில் பேசினுர்

இந்நாட்டில் யாழ்ப்பாணப் பகுதியில் மட்டும் தான் மாணவர்கள் விஞ்ஞானக் கல்வி பயில்வது அதிகரித்துவருகிறது நட்டின் மற்றப் பகுதிகளில் கொழும்பில் கூட யாழ்ப்பாணத்திலும் பார்க்க நான்கில் ஒரு பகுதி மாணவரே விஞ்ஞானக் கல்விப் பயிலுகின்றனர் நாட்டின் மற்றப் பகுதிகளில் விஞ்ஞானக் கல்வியில் அபிவிருத்தி ஏற்படவில்லை சிங்களப் பகுதிகளில் விஞ்ஞான ஆசிரியர்களைப் பெறுவது கஷ்டமாக இருக்கிறது கிராமப்புறங்களில் சிங்கள மாணவர்கள் விஞ்ஞானக்கல்வி வசதி பெற முடியாமல் கஷ்டமடைகின்றனர் இந்த கஷ்டத்தைப் போக்குவதற்கு உதவி செய்வதன்மூலம் நாட்டின் ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் வளர்க்கமுடியும். இதன் மூலம் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொள்ளவும் வழிபிறக்கும்.

## வல்வெட்டித்துறையில் மின்சாரம் அடிக்கடி நிற்கிறது!

வல்வெட்டித்துறை, வியா. வல்வெட்டித்துறை பட்டினசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு மின்சாரவிநியோகம் வழங்கப்பட்டு ஆண்டுகள்பல கடந்துவிட்டபோதிலும், 'மின்னி மின்னி எரியும்' மின்சார விநியோகத்தையே இப்போதும் பெற்றுவருவதாக இப்பகுதி மக்கள் அதிருப்தியும். கவலையும் தெரிவிக்கின்றனர்

இரவு நேரத்தில் அச்சமின்றிப் போக்குவரத்துச் செய்யக்கூடிய விதத்தில் ஓரளவு ஒழுங்காக எரிந்து கொண்டிருந்த வீதிவிளக்குகள் கூட கடந்த சிலகாலமாக இருளில் மூழ்கிக்கிடக்கின்றன இதனால் இரவு நேரத்தில் போக்குவரத்துச் செய்யமுடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய வீதியில் 5 வீதிவிளக்குகள் எரிந்துகொண்டிருந்ததாகவும், இப்போது அந்த ஐந்துவிளக்குகளில் ஒரு விளக்காவது எரிவதில்லையென்றும்கடைசி சந்திவிளக்காவது எரியக்கூடாதா என்றும் பொதுச்சேவையில் அக்கறையுள்ள ஒருவர் கேட்கிறுர். இதே போன்றே பல வீதிகளும் இருளில் மூழ்கிக்கிடக்கின்றன

வீடுகளிலும் திடீர்திடீர் என்று மின்சார விளக்குகள் அணைந்து விடுகின்றனவாம். இல்லாவிட்டால் இரவுபத்து மணிவரை 'மினிமினி' விளையாட்டுக்காட்டுகின்றனவாம் மின்சாரபல்புகள். இப்பகுதி பள்ளிப்பிள்ளைகள் ஒழுங்காகப் படிக்கமுடியாமல் திண்டாடுவதுடன். திடீர் திடீர் என்று அணைவதால் திருடர்கள் அதனைச் சாதகமாக்கிக்கொண்டு தமதுகைவரிசையைக்காட்டி விடுவார்களென்றும் அச்சம் தெரிவிக்கிருர்கள் இப்பகுதி பெற்ருேர்களும் பொதுமக்களும்.

வல்வெட்டித்துறை பட்டினசபைத் தலைவரிடம் இது பற்றி பல தடவை புகார் செய்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால், உள்ளூராட்சி ஆணையாளரிடமும், உள்ளூராட்சி அமைச்சரிடமும் மகஜர் ஒன்றைச் சமர்ப்பிக்க முடிவு செய்துள்ளார்கள் இப்பகுதி வாசிகள்.

## ஆகஸ்டில் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம்

### அமைச்சர் தகவல்

யாழ்ப்பாணம், வியா. இன்னும் 5 மாத காலத்திற்குள் யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டுவிடும் அரசாங்கம் இது பற்றி எல்லா முடிவுகளையும் செய்துவிட்டது ஆகஸ்ட் மாதத்திற்குமுன் யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் நிறுவுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிடும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயலாளரும், விளையாட்டு துறை அமைச்சருமான திரு இரத்நாயக்கா யாழ்ப்பாணத்தில் நடந்த சுதந்திரக் கட்சி மகாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் சுதந்திரக் கட்சிக் கிளைக் காரியாலயத்தில் திரு அல்பிரட் துரையப்பா தலைமையில் நடந்த இம்மகாநாட்டில் வடபகுதி சுதந்திரக்கட்சி கிளைகளைச்சேர்ந்த உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் இரத்நாயக்கா மேலும் கூறியதாவது: தமிழில் எழுதும் கடிதங்களுக்கு தமிழில் பதில் கிடைக்காவிடில், உடனடியாக என்னுடன் தொடர்புகொள்ளுங்கள் இதுபற்றி விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பேன்.

அமைச்சர் கன்னாதிட்டியில் நேற்று சுதந்திரக்கட்சிக் கிளை ஒன்றைத் திறந்து வைத்தார்.

## இடமாற்றம்

சுழிபுரம், வியாழன் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய பண்டிதர் எஸ் சண்முகநாதன் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் யாழ்ப்பாணம், வண்ணை வைத்தீஸ்வரவித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

......

## ஜி.ஸி.ஈ. (சாதாரண) பரீட்சை இனி ஒருவாரத்துள் முடியும்

கோட்டை, வியாழன் இவ்வருடம் டிசம்பர் மாதத்திலிருந்து ஜீ. சி. ஈ. சாதாரண பரீட்சை ஒரு வாரத்துக்குள் முடிவடையும் கல்வியமைச்சின் பரீட்சை இலாகாவை மாற்றியமைப்பதன் மூலம் இதைச் செய்யலாமெனக் கருதப்படுகிறது.

தற்போது மேற்படி பரீட்சையை நடத்திமுடிக்க 21 நாட்கள் தேவைப்படுகின்றன. சமீபத்தில் திரும்பவும் நடைபெற்ற 9 பாடங்களும் 4 நாட்களில் நடத்தப்பட்டன. சமீபத்தில் வினுத்தாள்கள் வெளியானதால் திரும்ப நடாத்தப்பட்ட பரீட்சைகளுக்கான வினுத்தாள்கள் புதிய பாடத்திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டன எனப் பரீட்சைப் பகுதி ஆணையாளர் டாக்டர் கே. ரி. டபிள்யூ சுமணசூரியா தெரிவித்துள்ளார்.

புதிய திட்டத்தை மேலும் செயற்படுத்துவதினுல்கூடிய நேரத்தை மீதப்படுத்தலாமென்பதை இது காட்டுகிறதென டாக்டர் சுமணசூரியா மேலும் தெரிவித்துள்ளார்.

பரீட்சைக் கமிஷனரின் சிபார்சுகளின் அடிப்படையிலேயே பரீட்சை இலாகா மாற்றியமைக்கப்படுமெனத் தெரியவருகிறது. இப்பரீட்சைக் கமிஷன் விரைவில் நியமிக்கப்படவிருக்கிறது.

ஜூன் 15ந் திகதிக்கு முன்னர் சமீபத்தில் நடைபெற்ற 9 பாடங்களின் முடிவுகளும் வெளியிடப்படுமென டாக்டர் சுமணசூரியா தெரிவித்துள்ளார்.

......

## வெள்ளைப்பூடு வைத்தியர்களுக்கு கிடைக்கும்

யாழ்ப்பாணம், வெள்ளி வெள்ளைப்பூடுதட்டுப்பாடு நோயாளர்களுக்கும் வைத்தியர்களுக்கும் பெரும் கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது இக்கஷ்டத்தைப் போக்கி நோயாளர்களுக்கும் வைத்தியர்களுக்கும் வெள்ளைப்பூடு கிடைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது அகில இலங்கை சித்தவைத்தியர் சங்கம் இந்த வாரம் வைத்தியர்களுக்கு இச்சங்கம் வெள்ளைப்பூடு விநியோகிக்கவுள்ளது. வெள்ளைப்பூடு பெற விரும்பும் வைத்தியர்கள் சங்கத்தின் தலைவருடன் அல்லது இணைக்காரியதரிசிகளுடன் தொடர்புகொள்ளலாம் என அறியப்படுகிறது.

## புதிய சமாதான நீதிபதி

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தைச்சேர்ந்த வழக்கறிஞர் திரு. இராஜா விஸ்வநாதன் யாழ்ப்பாணப்பகுதிச் சமாதான நீதிபதியாகவும், உத்தியோகப்பற்றற்ற நீதிபதியாகவும் நீதியமைச்சரினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை யாழ்ப்பாண நீதிபதி திரு. கொலின் மெண்டிஸ் முன்னர் இவர் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

## 'விஞ்ஞானி முழு உலகிற்கும் உரியவர்'

கோட்டை, வியாழன் "விஞ்ஞானி என்பவர் தன்னை மக்களுக்காக அர்ப்பணிக்கவேண்டும். அவர் சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழமுடியாது. அவர் முழு உலகத்துக்குமே பொறுப்புடையவராவார்'

இவ்வாறு கடந்த வருடம் நோபல் பரிசு பெற்றவரும், தற்போது 6 நாள் சுற்றுலாவில் இலங்கை [illegible] வருமான பேரா[illegible] ஹான்ஸ் அல்ப்வென் கூறினுர் 62 வயது நிரம்பிய இவர் தமது மனைவியுடன் முதல் முறையாக இலங்கை வந்துள்ளார். வருகிற 26-ந் [illegible] தில் விஞ்ஞானம் பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

## 4 பேருக்கு 2 ஆசிரியர்

முல்லைத்தீவு, வியாழன் நான்கு மாணவர்களுக்கு 2 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கும் அதிசயம் முல்லைத்தீவு வட்டாரக் கல்வியதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒரு பாடசாலையில் நடக்கிறது. ஆயிலடி தமிழ்க் கலவன் பாடசாலையில் நான்கு மாணவர்கள் இருப்பதாகவும், 2 ஆசிரியர்கள் இவர்களுக்குக் கல்வி கற்பிப்பதாகவும் கூறப்படுகிறது.

குளவிசுட்டான் என்ற இடத்திலுள்ள அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 90 மாணவர்கள் கல்வி கற்கிருர்கள். இங்கு ஒரேயொரு ஆசிரியர் மட்டும் கல்வி கற்பிக்கிருராம்.

......

## ஒல்லாந்து பிரமுகர்கள்

உடுத்திரபுரம், வியாழன் உருத்திரபுரம் காந்திநிலையத்தில் சர்வதேச சேவா சங்கத்தினர் சிரமதான மூலம் நிலையத்தின் ஒரு புறத்தில் இருந்த சிறு துண்டு நிலத்தைப் பயிர்ச் செய்கைக்கு ஏற்றவாறு பற்றைகளை வெட்டித் துப்புரவாக்கினர்.

திரு. தர்ம விஜயவர்த்தன ஒல்லாந்தைச் சேர்ந்த திரு. புஸ்பூம். திரு. ஸ்கிளென், திரு. யேன் பெனிங்ஸ் ஆகியோர் விசேடமாக இச்சிரமதானத்தில் கலந்துகொண்டனர். காணி இலாகாவைச் சேர்ந்த திரு. க. திருநாவுக்கரசு தலைமையில் சிரமதானம் நடைபெற்றது.

## கிரிக்கெட் டெஸ்ட் வெற்றி தோல்வி இல்லை

ஜோர்ஜ்டவுண், மார்ச் 25 மேற்கிந்தியகோஷ்டிக்கும் இந்திய கோஷ்டிக்குமிடையில் இங்கு நடைபெற்று வந்த 3-வது கிரிக்கெட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது-இந்திய தரப்பில மன்காட்டும் காவாஸ்கரும் சிறப்பாக ஆடி 100 ஓட்டங்களுக்குமேல் எடுத்தனர். மன்காட் 53 ஓட்டங்களையும் காவாஸ்கர் 62 ஓட்டங்களையும் எடுத்தனர்.

மேற்கிந்திய தரப்பில் சோபர்ஸ் செஞ்சரி அடித்து சிறப்பாக விளையாடினர். டெஸ்ட் போட்டிகளில் இது சோபர்ஸுக்கு 26வது செஞ்சரியும் இதுவரை 7000க்கு மேற்பட்ட ஓட்டங்களையும் அவர் எடுத்திருக்கிருர்.

## நிர்வாகிகள்

அம்பன், வியாழன் வல்வெட்டித்துறை சிவகுருவித்தியாலய பெற்ருர் ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் கல்லூரி அதிபர் திரு. சி. அழகதுரை தலைமையில் நடைபெற்ற போது நிர்வாகிகளாகப்பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் சி. அழகதுரை, உபதலைவர்கள் சே. சுந்தரலிங்கம், த. சுந்தரமணி. செயலாளர் திரு. ச. சச்சிதானந்தவேல், உபசெயலாளர் ம. வெங்கடாசலம் பிள்ளை, பொருளாளர் பெ. சச்சிதானந்தம் 9 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி வண்ணைஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் 5-ந் திருவிழாவான இன்று மாலை 6 மணி தொடக்கம் 6 45 மணி வரை வித்துவான் திரு சே கே நடராஜா அவர்களினுல் பெரியபுராண விரிவுரைத் தொடரும் 6-45 மணி தொடக்கம் 7-30 மணி வரை திரு வி க ஆறுமுகம் அவர்களினுல் "சூரபதிமன் வதை" என்ற பொருள் பற்றியும் கதாப்பிரசங்கமும் இரவு 8-30 மணி முதல் 9-30 மணி வரை செல்வன் கே குமரேசனின் இன்னிசை விருந்தும் சுவாமி காமதேனு வாகனத்தில் வீதி சுற்றுலாவுதலும் நிகழும்

## மரண அறிவித்தல்

### எம். எற்வேட்

திருமதி திரேசம்மாவின் அன்புக் கணவரும், திருமதி ரேசலீன் துரையப்பாவின் மருமகனும், மைக்கல் (யாழ் மைக்கா ஆட்), பிரான்சிஸ் செல்ரேச் (ஆசிரியர் யாழ். அரியாலை அரசினர் பாடசாலை), திருமதி எலிசபெத், தங்கச்சியம்மா, பார்பரு. சிஸ்ரர் மகிடலின் ஆகியோரின் மைத்துனரும், திரு. அந்தோனிப்பிள்ளை (றிச்சட் பீரிஸ், கொழும்பு), வி. அருள்நாயகம் (யாழ் தந்தி இலாகா), திரு எஸ். சீவரத்தினம் (உதவி ஸ்ரேசன்மாஸ்டர், தெகிவளை), திருமதி மைக்கல் செபமாலை ஆகியோரின் அண்ணரும், திருமதி லூர்த்தமாட்டின், திரு. எம். பீற்றர் (யாழ். தந்தி இலாகா) ஆகியோரின் சகோதரருமாகிய எம். எற்வேட் (யாழ்ப்பாணம் தபால் தந்தி இலாகா) அவர்களின் பிரேத அடக்கம் 26-3-71 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும். 'துரையப்பா இல்லம்', 15, ரெம்பிள் ரோட், யாழ்ப்பாணம். 2601

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் பிரவுண் கோவில் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ந் தேதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org